


ப்ரஹ்மச்சர்யம் என்பது பற்றிய புதுமையானதொரு விளக்கத்தை இந்த உபநிஷதம் தருகிறது. ஓங்கார த்யானத்திலும் ஓங்காரத்தைக் கடந்து அநாஹத த்வனி த்யானத்திலும் (இதுவே பரம புருஷ வித்யையாகும்) இது தருகின்ற விளக்கங்கள் வித்தியாசமானவை.

**நூலைப் பற்றி:**

**பெயர்** : **<u>ப்ரச்ன</u> உபநிஷதம்**

**மொழி** : **தமிழ்**

**j k|o t|s f f k** : **ஸ்ரீ.ஸ்ரீ. வேதானந்த**

**விலை** : **சிரத்தையுடன் படித்தல்**

**பதிப்புரிமை** : **இதனை நீங்கள் இலவசமாக பயன்படுத்தலாம் என்றாலும் பயன்படுத்தும்போது இந்த ஆசிரியர் மற்றும் வலைதளம் பற்றி அவசியம் குறிப்பிடவேண்டும்.**

http://sknathan12.wix.com/vedaspark

www.vedaspark.weebly.com mail id: sknathan12@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-NonCommercial-NoDerivatives 4.0 International License.

**<a rel="license" href="http://creativecommons.org/licenses/by-nc-nd/4.0/"><img alt="Creative Commons License" style="border-width:0" src="https://i.creativecommons.org/l/by-nc-nd/4.0/88x31.png" /></a><br />This work is licensed under a <a rel="license" href="http://creativecommons.org/licenses/by-nc-nd/4.0/">Creative Commons Attribution-NonCommercial-NoDerivatives 4.0 International License</a>.**

இந்த உபநிஷதம் அதர்வ வேதத்திலிருந்து எடுக்கப்பட்டது. ஓங்காரம், அதன் தியானம் பற்றி இந்த உபநிஷதம் விரிவாகப் பேசுவதால் இது மாணடூக்ய உபநிஷதத்தின் துனை உபநிஷதமாகக் கொள்வோரும் உண்டு. இருந்தாலும் ஓங்காரத் தியானம் என்பது இந்த உபநிஷதத்தின் ஒரு பகுதியே ஆகும். ஓங்கார த்யானத்திலும் ஓங்காரத்தைக் கடந்து அநாஹத த்வனி த்யானத்திலும் (இதுவே பரம புருஷ வித்யையாகும்) இது தருகின்ற விளக்கங்கள் வித்தியாசமானவை. வேறெங்கும் காணப்படாதவை. இந்த உபநிஷதம் ஆறு கேள்விகளுக்கான விடையாக அமைந்துள்ளது. ஆறு கேள்விகளும் ஆறு ஆதார மையங்களிலிருந்து எழுந்தவையாக வரிசையாக அமைந்துள்ளன.

நமது உபநிஷத உரைகளில் நாம் பெரும்பாலும் நம் கருத்துக்களை புகுத்துவதில்லை. உபநிஷதம் சொல்வதை உள்ளது உள்ளபடியே கொடுத்து வந்திருக்கிறோம். ஆனால், இந்த உபநிஷதத்தில் நமது கருத்துக்களை, விளக்கங்களை, சில தகவல்களைத் தருவது தவிர்க்க முடியாததாகிறது. எனவே, ஆங்காங்கே நீண்ட விளக்கங்களும் பெட்டிச் செய்திகளும் உள்ளன.

கேள்வி-பதில் வடிவிலேயே அமைந்திருப்பதால் இதன் பெயர் ப்ரச்ன – கேள்வி – உபநிஷதம் என்பதாகிறது.

மற்ற மூன்று வேதங்களும் இறைநெறியை மட்டுமே உயர்த்திப் பிடித்திருக்க, மக்கள் வேதம் என்று சொல்லத்தக்க அளவில் நடைமுறை உலகியல் வாழ்வுக்கான வேதமாக விளங்கும் அதர்வ வேதத்தின் சாயலை இந்த உபநிஷதத்தில் காண முடிகிறது.

ப்ரஹ்மச்சர்யம் என்பது பற்றிய புதுமையானதொரு விளக்கத்தையும் இந்த உபநிஷதம் தருகிறது.

**சாந்தி மந்திரம்**

சாந்தி மந்திரம் என்பது பிரார்தனை. ஒவ்வொரு வேதத்திற்கும் ஒரு பிரார்த்னை மந்திரம் உண்டு. அந்த வேதத்திலிருந்து எடுக்கப்படும் எல்லா உபநிஷதங்களுக்கும் அந்த பிரார்தனையே சொல்லப்படும். அந்த வகையில் அதர்வண வேதத்தின் பிரார்தனை மந்திரம் இந்த உபநிஷதத்திற்கு சொல்லப்படுகிறது.

இரண்டு பிரார்தனைகள் இருக்கின்றன.

ஓம் பத்ரம் கர்ணேபி ஸ்ருணயாம தேவா: பத்ரம் பச்யேமாக்ஷ பிர் யஜத்ரா| ஸ்திராரங்கைஸ் துஷ்ட்டுவாக்ம்ஸஸ்தனூபி: வ்யசேம தேவஹிதம் யதாயு --(1)

ஸ்வஸ்தி ந: இந்த்ரோ வ்ருத்த ச்ரவா: ஸ்வஸ்தி ந பூஷா விச்வ வேதா ஸ்வஸ்தி நஸ்தார்க்ஷ யோ அரிஷ்ட்டநேமி: ஸ்வஸ்தி நோ பிருகஸ்பதிர் ததாது --(2)

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

தேவர்களேஇ உயர்ந்த விஷயங்களை (எம்) காதுகள் கேட்கட்டும். பூஜிக்கத்தகுந்தவர்களேஇ கண்கள் உயர்ந்த விஷயங்களைக் காணட்டும். (உயர்ந்த அல்லது நல்ல விஷயங்கள் என்றும் எடுத்துக்கொள்ளலாம். அபி என்ற பதம் வருவதால்இ புலன்களுக்கு மீறிய விஷயங்கள் என்றும் கொள்வதற்கு இடமுண்டு). உங்களை வணங்குவதற்குஇ உறுதியான அங்கங்களுடன்இ ஊக்கத்துடன் நாங்கள் இருப்போமாக. இறைவனால் அளிக்கப்பட்ட முழு ஆயுளையும் நாம் வாழ்வோமாக.

ஸ்வஸ்தி என்பது மங்கல ஆசி. வளர்ந்த புகழை (உடைய) இந்திரன் நம்மை வாழ்த்தட்டும். ஒளிர்பவன் மற்றும் அனைத்தும் அறிந்தவனான சூரியன் நம்மை வாழ்த்தட்டும்இ தடையற்று பயணம் செய்பவனான கருடன் நம்மை வாழ்த்தட்டும். குருவான பிரகஸ்பதியும் நம்மை அவ்வாறே வாழ்த்தட்டும்.

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி.

(நம்) வாக்குஇ மனம் மற்றும் உடலளவில் அமைதி நிலவட்டும்.

மும்முறை சாந்தி என்று சொல்வதற்கு நாம் இந்த பொருளையே தருகிறோம் என்றாலும் பொதுவாக வேறு ஒரு பொருளும்

தரப்படுகிறது. மூவகை தடைகள் அகன்று சாந்தி நிலவ பிரார்த்திப்பது இது என்றும் சொல்கிறார்கள். ஆனால் 'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்று வாழ்ந்த நம் முன்னோர்கள் 'பிற உயிர்களால் வரும் தடைகள்' என்று யோசித்திருபபார்களா என்பது சிந்தனைக்குரியதே.

மேலும் 'மூவுலகிலும் அமைதி நிலவட்டும்' என்று பிரார்த்திப்பதாகவும் நினைக்கலாம்.

ஓம் நம: பரமாத்மனே ஹரி: ஓம்
ஸுகேசா ச பாரத்வாஜ: சைப்யச்ச ஸத்யகாம: சௌர்யாயணீ ச கார்க்ய: கௌஸல்யச்ச ஆச்வலாயனோ பார்கவோ வைதர்பி: கபந்தீ காத்யாயனஸ்தே ஹைதே ப்ரஹ்மபரா ப்ரஹ்மநிஷ்ட்டா பரம் ப்ரஹ்மான்வேஷமாணா ஏஷ ஹ வை தத்ஸர்வம் வக்ஷ்;யதீதி தே ஹ சமித்யாணயோ பகவந்தம் பிப்பலாதம் உபசன்னா

ஓம். பரம்பொருளுக்கு வணக்கம். ஹரி ஓம்.

பரத்வாஜரின் மகனான சுகேசன், சிபியின் மகனான சத்யகாமன், சூரியனின் பேரனான கார்க்கியன், அச்வலரின் மகனான கௌஸல்யன், விதர்ப்ப நாட்டைச் சேர்ந்த பார்க்கவன், காத்யரின் மகனான கபந்தி ஆகிய இறைநாட்டம் கொண்ட, இறைவுணர்வில் நிலைபெற்ற அவர்கள் இறைத்தன்மையின் தேடலில் இருந்தார்கள். தெய்வ முனிவரான பிப்பலாதர் இறைத்தன்மையைப்பற்றி தெளிவாக சொல்லக்கூடியவர் என்பதால் அவரை கையில் சமித்துடன் அணுகினர்.

வெவ்வேறான இடங்களிலிருந்து வருகின்ற அறுவர் இந்த பிப்பிலாத முனிவரை நாடுவதிலிருந்து இவரது சிறப்பு புலப்படுகிறது. 'கையில் சமித்துடன்' என்ற வார்த்தைகள் அழகானவை. வேதகாலத்தில் வேள்விகள் அதிகம் நடந்தன. அந்த வேள்விகளுக்கு சமித்துக்கள் என்று சொல்லப்படும் சிறு மரக் குச்சிகள் அதிகம் தேவை. இதனால்தான் 'கையில் சமித்துடன்' வருவது சீடர்களுக்கு லட்சனமாக இருந்ததா என்றால் அல்ல. புகழ்பெற்ற முனிவரான பிப்பலருக்கு பல சீடர்கள் இருக்கமுடியும். அவருக்கு வேண்டிய சமித்துக்களை அவரே ஏற்பாடு செய்து கொள்ள முடியும். ஆனால், புதிய ஒரு மனிதனைப்பற்றி அறிந்துகொள்ள துனைசெய்பவை அவனிடமிருக்கும் பொருட்களே.

சீடனாக சேர வரும் ஒருவன் தான் அந்த சமித்தைப் போல் இறைவுணர்வுத் தேடலில் தன்னையே இழக்கவும் தயாராக இருப்பதைக் குறிப்பால் உணர்த்தவே அந்தக் கால சீடர்கள் கையில் சமித்துடன் குருவை நாடினார்கள்.

தான் ஹ ரிஷிருவாச பூய ஏவ தபஸா ப்ரஹ்மச்சர்யேன ச்ரத்தயா ஸம்வத்ஸரம் ஸம்வத்ஸ்யத யதாகாமம் ப்ரச்னான் ப்ருச்சத யதி விஜ்ஞாஸ்யாம ஸர்வம் ஹ வோ வக்ஷ்;யாம இதி.

அவர்களிடம் அந்த முனிவர், “தவம், ப்ரஹ்மச்சர்யம் மற்றும் சிரத்தையோடு ஒரு வருடகாலம் இங்கிருங்கள். ஒரு வருடத்திற்குப் பிறகு உங்களுக்குத் தோன்றும் எந்தக் கேள்வியையும் கேளுங்கள். தெரிந்தால் நிச்சயமாக விளக்கமாக சொல்கிறேன்” என்றார்.

‘ஒரு வருட காலம் இருங்கள்’ என்பது மிக அழகானது. சாதகர்களிடம் சாதாரணமாகத் தோன்றக்கூடிய பல கேள்விகள் ஞானியின் சமீபத்தில் வாழும் ஒரு வருட காலத்தில் அழிந்து போகும். ஆத்மார்த்தமான கேள்விகளே எஞ்சி நிற்கும். மேலும், முதிர்ந்த சாதகன் ஞானியின் அருகாமையால் ஞானமடைவதும் நிகழக்கூடியதே. அப்பொழுது அவனது சந்தேகங்கள் யாவும் மறைந்து போகும். எனவே, இதனையும் மீறித் தோன்றக்கூடிய வினாக்கள் பதிலளிக்கத்தக்கவையே. (கௌதம புத்தரின் வாழ்வில் நடந்ததாகக் கூறப்படும் ஒரு நிகழ்வு இங்கே குறிப்பிடத்தக்கது. புத்தரை நாடி ஒருவன் வந்து பல கேள்விகளை எழுப்பியவாறு இருந்தான். புத்தர் அவனிடம் ‘இங்கே ஒரு வருடம் மவுனமாக இரு. ஒரு வருடம் கழிந்தபின் நீ கேட்கும் எல்லா கேள்விகளுக்கும் விளக்கமாக நான் விடையளிக்கிறேன்’ என்றார். புத்தருக்கு அருகிலிருந்த சாரிபுத்தன் உரக்க சிரித்தான். வந்த நபர் சிரிப்பிற்கான காரணத்தைக் கேட்ட போது சாரிபுத்தன் சொன்னான். “இவர் உன்னை நன்றாக ஏமாற்றுகிறார். நானும் உன்னைப்போல் பல கேள்விகளோடு இங்கே வந்தேன். என்னிடம் இவ்வாறுதான் சொன்னார். ஒரு வருடம் மவுனமாக கழித்த பின்னர் என்னிடம் கேள்விகளே இல்லை. நான் கேட்பதற்கு எதுவுமே இல்லை. பதிலளிப்பதிலிருந்து அவர் தப்பித்துக் கொண்டார். கேள்விகளைக் கேட்பதானால் இப்பொழுதே கேட்டுவிடு. பின்னர் கேட்பதற்கு கேள்விகளே இருக்காது” என்றான்.)

மேலும் ஞானியின் அருகாமையில் ஒரு வருட காலம் சீடனாக வாழ்வதும் எளிதானதல்ல. அவனது உள்ளம் பாற்கடலைப் போல் கடையப்படும். அதில் பல்வேறு விஷயங்கள் வெளிப்படும். அவற்றையெல்லாம் மீறி தன் குறிக்கோளில் மாறாது நிலைப்பவனே குருவருள் என்ற அமிர்தத்தை அடைய முடியும்.

'தெரிந்தால் சொல்கிறேன்' என்ற வார்த்தைகள் அவரது அடக்கத்தையே காட்டுகின்றன. புகழ்பெற்ற ஞானியும் சத்குருவுமான அந்த முனிவர் இந்த வார்த்தைகளைச் சொன்னது அந்தக் கால முனிவர்களின் அடக்கத்தையே காட்;டுகிறது.

அத கபந்தீ காத்யாயன உபேத்ய பப்ரச்ச பகவன் குதோ ஹ வா
இமா: ப்ரஜா ப்ரஜாயந்த இதி.

பிறகு காத்யாயனரின் மகனான கபந்தீ ஆச்சார்யரான பிப்பலாத முனிவரை அணுகி "தெய்வ முனிவரே, இந்த உயிரினங்கள் எங்கிருந்து தோன்றின?" என்று கேட்டான்.

இந்தக் கேள்வியை ஆழ்ந்து புரிந்து கொள்ளுங்கள். மேலோட்டமாகப் பார்த்தால் இந்தக் கேள்விப் பாமரத்தனமானதாக, உலகியல் சந்தேகமாகத் தோன்றும். ஆனால், ஆன்மீக சாதனைகளில், தியானம் தவம் போன்றவற்றில் பழகியவர்களுக்கு இந்தக் கேள்வி மூலாதார சக்கரத்திலிருந்து பிறந்தது என்பது புரியும்.

இறைத்தன்மையிலிருந்து தோன்றியதே இந்த உலகம். மீண்டும் அந்த மூலத்தை அடைய வேண்டுமென்றால், அந்த மூலத்தைப் பற்றி அறிய வேண்டுமென்றால், இந்த படைப்புகளைப்பற்றி அறிந்தாக வேண்டும். மேலும் உயிர்களின் தோற்றத்தைப் பற்றிக் காமம் கலவாமல் அறிய வேண்டியதும் அவசியமாகிறது. காமம் என்பது ஆசை. காமம் கலவாததால், கோபம், வெறுப்பு போன்றவை அகன்றுவிடும். ஆதார சக்தி மையமான மூலாதார சக்கரத்தின் அடைப்புகள் நீங்கினால் அந்த சக்தி மையம் அற்புதமாய் செயல்படத் துவங்கும். மூலாதார மையம் செயல் பட்டால் மாயை அகலும். எனவே இந்தக் கேள்வி மிக ஆழமானதும் அழகானதும் ஆகும்.

கேள்வியை சரியாகப் புரிந்துக் கொண்டால்தான் அதற்கான பதிலையும் நம்மால் புரிந்து கொள்ள முடியும். இப்பொழுது பிப்பலாத முனிவரின் பதிலைப் பார்ப்போம்.

தஸ்மை ஸ ஹோவாச ப்ரஜாகாமோ வை ப்ரஜாபதி: ஸ தபோ
அதப்யத ஸ தபஸ்தப்த்வா ஸ மிதுனம் உத்பாதயதே ரயிம்ச
ப்ராணம் சேதி ஏதௌ மே பஹுதா ப்ரஜா கரிஷ்யத இதி.

தன் முன்னிருந்த சீடனைப் பார்த்து பிப்பலாத முனிவர் “படைப்புக் கடவுள் (பிரஜாபதி) உயிர்களைப் படைக்க விருப்பம் கொண்டார். தவத்தில் ஈடுபட்டார். தவம் செய்த பிறகு அவர் ஜடப்பொருளையும் ப்ராண சக்தியையும் - இவையே பலவாறான உயிர்களைப் பிறப்பிக்கும் என்று - ஜோடியாகத் தோற்றுவித்தார்.” என்றார்.

பிரஜாபதி என்பது பதவிப்பெயர். உயிர்களை உற்பத்தி செய்பவர் பிரஜாபதி. அவர் தன் விருப்பம் நிறைவேற தவம் செய்தார். தவம் என்றால் என்ன? ஒருமித்த சிந்தனையே தவம் எனப்படும். தவம் - அதாவது ஒருமித்த சிந்தனையின் காரணமாக அவர் ஜடப்பொருளையும் ப்ராண சக்தியையும் உருவாக்கினார். (இன்றைய விஞ்ஞானம் இந்தக் கருத்தை அப்படியே ஆமோதிக்கிறது. ஜடப்பொருள் என்றால் ஆயவவநச. ப்ராண சக்தி என்பது நுநெசபல. இந்த இரண்டுமே பிரபஞ்சத்தின் தோற்றத்திற்குக் காரணம் என்று விஞ்ஞானம் கண்டுபிடித்திருக்கிறது.)
இந்த ஜோடியை ஏன் படைத்தார்? பல்வேறான உயிர்களை இந்த இரண்டுமே உருவாக்கும் என்பதால் பிரஜாபதி இந்த ஜோடியைப் படைத்தார். ஜடத்தன்மையும் சக்தியும் இனையாமல் பிரபஞ்சத்தில் எதுவுமே இருக்க முடியாது.

பிரபஞ்சத்தின் தோற்றத்தைப் பற்றி மற்ற உபநிஷதங்களின் கருத்து வேறு. பிரம்மம் தன்னைத் தானே பல்வேறாக ஆக்கிக்கொண்டது என்றே மற்ற உபநிஷதங்கள் தெரிவிக்கின்றன. மேலும் விரிவாகக் கூறினால் ‘பிரம்மத்திலிருந்து வெளி, காற்று, நெருப்பு, நீர், பூமி, தாவரங்கள், உயிர்கள்’ என்றே வரிசைப்படுத்தப்படுகிறது. ஏன் இந்த முரண்பாடு?

இது முரண்பாடல்ல. பிரம்மம் பல்வேறான உருவங்களையும் பெயர்களையும் பெறுவதற்கு ஆதாரமானது ‘ஓங்காரம்’ என்பதை எந்த உபநிஷதமும் மறுக்கவில்லை. அந்த ஓங்காரமே இந்த உபநிஷதத்தில் ‘சக்தி’ என்று குறிப்பிடப்படுகிறது. ‘ஜடப்பொருள்’ என்று குறிப்பிடப்படுவது பிரம்மம் தன்னைப் பலவாறாக மாற்றிக்கொண்ட உருவங்களே. பல்வேறு உபநிஷதங்களும் ‘பிரம்மம் தன்னைப் பல்வேறு

உருவங்களாக மாற்றிக்கொண்டது. பிறகு அவற்றுள் புகுந்து அவற்றுக்கு ஜீவனாகியது' என்றே குறிப்பிடுகின்றன. பிரம்மம் பல்வேறு உருவங்களாகியது 'ஜடப்பொருள்' என்றும் அவற்றின் ஜீவனளித்தது 'சக்தி' என்றும் இந்த உபநிஷதத்தில் குறிப்பிடப்படுகிறது.

கேட்கப்பட்ட கேள்வி உயிரிணங்களின் தோற்றத்தைப் பற்றியது. அந்த கேள்விக்கான விடை இதுவே. இத்துடன் இந்த பதில் நிறைவுற்றிருக்கவேண்டும். ஆனால், நாம் முன்பே கூறியது போல் கேள்வி சாதாரனமானதல்ல. பதிலும் இத்துடன் நிற்கவில்லை. வார்த்தைகளாக வரும் கேள்விகளுக்கப்பால் கேட்பவருக்காக விடையளிக்கப்படுகிறது. பிப்பலாத முனிவரின் பதில் தொடர்கிறது.

ஆதித்யோ ஹ வை பிராணோ ரயிரேவ சந்த்ரமா ரயீர்வா ஏதத்
ஸர்வம் யன்மூர்த்தம் சாமூர்த்தம் ச தஸ்மான் மூர்த்திரேவ ரயி:

நிச்சயமாக சூரியனே பிராணன். சந்திரன் ஜடப்பொருள். இங்கு உருவமுடையவையும் உருவமற்றவையும் ஆகிய சகலமும் ஜடப்பொருளே. அதனால் பொருட்கள் அனைத்தும் ஜடப்பொருளே.

சூரியனின் ஒளியைப் பெற்று சந்திரன் ஒளிர்கிறது என்பதை இங்கு உதாரணமாகக்கொண்டு ஜடம் மற்றும் சக்தியை விளக்குகிறார். சூரியனே சக்தி. சந்திரன் அந்த சக்தியால் ஒளிரும் ஜடப்பொருள். இந்த உலகில் உருவமுள்ள மற்றும் உருவமற்ற யாவும் ஜடப்பொருளே. பிராண சக்தியின்றி எதுவும் இயங்குவதில்லை. அதனால் பொருள் என்றாலே அது ஜடப்பொருளே.

ஏன் இந்த விளக்கம்? பிரம்மம் அல்லது இறைவன், பிராணன் என்ற சக்தியையும் ஜடப்பொருளையும் படைத்தார் என்று பார்த்தோம். எதெல்லாம் ஜடப்பொருள்? அதற்குத்தான் இந்த விளக்கம். இந்த பிரபஞ்சத்திலுள்ளது அனைத்தும், அதாவது படைக்கப்பட்ட அனைத்துமே ஜடப்பொருளே. பிராணன் என்ற சக்தியின்றி அவை தனித்தியங்குபவையல்ல.

அதாதித்ய உதயன் யத்ப்ராசீம் திசம் பிரவிசதி தேன ப்ராச்யான்
ப்ராணான் ரச்மிஷு ஸன்னிதத்தே யத்தக்ஷிணாம் யத்ப்ரதீசீம்

யதுதீசீம் யததோ யதூர்த்வம் யதந்த்ரா திசோ யத்ஸர்வம் ப்ரகாசயதி தேன ஸர்வான் ப்ராணான் ரச்மிஷு ஸன்னிதத்தே

பிறகு, ஆதித்தன் உதயமாகிறான். கிழக்கில் தன் ஒளிக்கிரணங்களைப் பரப்பும்போதே அந்த திசையில் உள்ளவற்றிற்கு பிராணனை கதிர்களால் வழங்குகிறான். தெற்கு, வடக்கு, மேற்கு, மேல், கீழ் என்று எல்லா திசைகளிலும் ஒளியைப்பரப்புகிறான். தன் ஒளிக்கிரணங்களுடனே ப்ராணனையும் வழங்குகிறான்.

இந்த ஸ்லோகத்தை ஆழ்ந்து புரிந்து கொள்ளுங்கள். மேலோட்டமாகப் பார்த்தால் இது இயல்பான ஒரு காலைக் காட்சியாகத் தெரியும். ஆனால் இங்கு 'அத' – பிறகு – என்ற சொல் முக்கியமானது. முந்தைய ஸ்லோகம் ஜடப்பொருளைப் பற்றிப் பேசியது. அந்த ஜடப்பொருள் ப்ராணன் பெறுவதை இந்த ஸ்லோகம் சொல்கிறது. ஆதித்தன் என்ற சொல்லுக்கு சூரியன் என்ற பொருள் மட்டுமல்ல. பிரபஞ்சம் உருபெற்ற போது வெளிப்பட்ட ஆதார சக்திக்கும் பெயர் ஆதித்தன். ஆதித்தன் எனும் ப்ராணசக்தி ஒவ்வொரு பொருளுக்குள்ளும் எழுகிறது. சூரிய உதயம் என்பது ஒரு உதாரணம். உதிக்கும் சூரியனைப்போல் ஒளியற்ற ஒளியான அந்த ஆத்மா, தன் ஒளியால் ஜடப்பொருளுக்கு சக்தியூட்டுகிறது. இந்த ப்ராணனுக்கு திசைகள் யாவும் ஒன்றே. எங்கெங்கெல்லாம் ஜடப்பொருள் உண்டோ அங்கெல்லாம் ப்ராண சக்தியும் பாய்கிறது.

மேலும், ஜடப்பொருளின்றி சக்தியும் தனித்தியங்க முடியாது என்பது நுட்பமாக உணரத்தக்கது. நூலறிவு கொண்டோ, கேள்வி ஞானத்தாலோ ஆத்மாவைப் 'பற்றி' தெரிந்துகொண்டு, அதன் அனுபவம் இல்லாமல் 'நான் ஆத்மா – உடலல்ல' என்று பிதற்றுபவர்கள் ஜடப்பொருளான உடலைப் பேணத் தவறுகிறார்கள். ஜடப்பொருள் இல்லாததால் ப்ராண சக்தி இயங்குவதில்லை. ஆத்ம தரிசனம் வாய்ப்பதுமில்லை.

ஸ ஏஷ வைச்வானரோ விச்வரூப: ப்ராணோ Sக்னிருதயதே ததேதத் ரிசாப்யுக்தம்

அது நிச்சயமாக அனைத்தும் அறிந்த வைச்வானரன். விச்வரூபன். அந்த ப்ராணனோ அக்னிபோல் எழுகிறது. இவ்வாறு ரிக்வேதத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஜடப்பொருளுக்கு சக்தியளிப்பதான ஆத்மா அனைத்திலும் ஊடுருவி இருப்பதால் 'வைச்வானரன்' – அனைத்திலும் உள்ளவன் - என்று குறிப்பிடப்படுகிறது. அனைத்திலும் உள்ளதாகையால் 'விச்வ ரூபன்'. இவ்வாறானப் ப்ராணசக்தி அக்னிபோல் ஜடப்பொருளுக்குள் எழுகிறது.

இதயத்துடிப்பு நின்றுபோவதோ மூளை இயக்கமற்றுப் போவதோ இன்றும் மனிதனின் மரணத்திற்கு அறிகுறியல்ல. அவன் உடல் சூடு இல்லாமல் போனால் அவன் மரணமடைந்தவனாகக் கருதப்படுகிறான். எனவே ப்ராண சக்தி நெருப்பு போல் எழுவதாக சொல்வது எத்தனைப் பொருத்தம்?

> விச்வரூபம் ஹரிணம் ஜாதவேதஸம் பராயணம் ஜ்யோதிரேகம் தபந்தம் ஸஹஸ்ர ரச்மி: சததா வர்த்தமான: ப்ராண: ப்ரஜானாமுதயத்யேஷ ஸ¬_ர்ய

அனைத்து உருவிணன், கதிர்கள் நிறைந்தவன், எல்லாம் அறிந்தவன், அனைத்திற்கும் ஆதாரமானவன், ஒன்றேயான ஒளிப்பொருள், வெப்பத்தைக் கொடுப்பவன், ஆயிரம் கதிர்களுடன் நூற்றுக்கணக்கான வழிகளில் செயல்படுபவன், உயிர்களின் ப்ராணன் உதிக்கின்றான் இந்த சூரியனைப் போல்.

ப்ராணசக்தியைப் பற்றிய, முந்தைய ஸ்லோகம் குறிப்பிட்ட ரிக்வேத ஸ்லோகம் இது. ப்ராணசக்தியாகிய ஆத்மா அனைத்து உருவினன், ஒளிப்பொருள், எல்லாம் அறிந்தவன், அனைத்திற்கும் ஆதாரம், ஒன்றேயான – பிரம்மத்தின் பகுதியானதால் - ஒளிப்பொருள், வெப்பமாக ஜடப்பொருளில் வெளிப்படுபவன், பலவான தன் சக்தியலைகளால் பல்வேறு வழிகளில் செயல்படுபவன். அத்தகைய ப்ராணசக்தி சூரிய உதயம் நிகழ்வது போல் உயிர்களில் உதிக்கிறது என்கிறது இந்த ஸ்லோகம்.

ஸம்வத்ஸரோ வை ப்ரஜாபதி: தஸ்யாயனே தக்ஷிணம் ச உத்தரம் ச
தத்யே ஹ வை ததிஷ்ட்டாபூர்த்தே க்ருதமித்யுபாஸதே தே சந்த்ரமஸமேவ லோகமபிஜயந்தே த ஏவ புனராவத்தந்தே. தஸ்மாதேத ரிஷய: ப்ரஜாகாமா தஷிணம் பிரதிபத்யந்தே ஏஷ ஹ வை ரயிர்ய: பித்ருயாண:

வருடமே படைப்புக்கடவுள். அவரது பாதைகள் இரண்டு. தக்ஷிணாயனம் மற்றும் உத்திராயனம். நிச்சயமாக முன்னொரு காலத்தில் யாகங்கள், நற்பணிகளுமே செய்யத்தகுந்தவை என்று கொண்டவர்கள் - அவர்கள் சந்திரலோகத்தை அடைந்து மீண்டும் பூமியில் பிறப்பெடுக்க வேண்டியவர்கள். அதனால் சந்ததி போன்ற உலகியல் விஷயங்களை விரும்புபவர்களுக்கு ரிஷிகள் தக்ஷிணாயனத்தை பின்பற்ற செய்கிறார்கள். இது பித்ருலோகப் பாதை. இது நிச்சயமாக ஜடப்பொருள்.

வருடம் என்பது காலத்தின் குறியீடு. காலமே படைப்புக்கடவுள். அனைத்தும் பிரம்மத்தில் ஒடுங்கிய நிலையில் காலமே படைப்பை துவங்கச்செய்கிறது. எனவே காலமே படைப்புக்கடவுள். அந்த காலத்திற்கு இரண்டு பாதைகள் உண்டு. அவை தக்ஷிணாயனம் மற்றும் உத்ராயனம். (கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நகரும் சூரியனின் பாதை சற்றே வடக்கு திசை சார்ந்து நடக்கும் காலம் உத்திராயனம். அந்தப்பாதை தெற்கு திசை சார்ந்து நடக்கும் காலம் தக்ஷிணாயனம். இதை தேவர்களின் பகல் மற்றும் இரவு என்று சொல்வார்கள். இதனாலேயே உத்திராயன காலத்தில் ஆன்பால் தெய்வங்களின் விழாக்களும் தக்ஷிpணாயனத்தில் பெண் தெய்வ வழிபாடுகளும் அதிகமாக நடப்பதைக் காணலாம்).

யாகங்களும் நற்பணிகளுமே மேலானவை என்று கருதுபவர்கள் பலர் உண்டு. அவர்கள் சந்திரலோகத்தை அடைந்து, தம் நற்பணிகளுக்கான பலன்களை அனுபவித்துப் பிறகு மீண்டும் பூமியில் பிறக்க வேண்டியவர்கள். இவ்வாறான உலகியல் ஆசைகள்

உள்ளவர்களுக்கு ரிஷிகள் தக்ஷிணாயனத்தைக் காட்டுகிறார்கள். அதாவது உலகியல் ஆசைகள் நிறைவேறுவதற்காக செய்யப்படும் யாகம் முதலிய செயல்கள் தக்ஷிணாயனத்தில் அதிக பலனைத் தருகின்றன. (தக்ஷிணாயனம் என்பது இரவுப் பகுதி என்று கண்டோம். இரவு ஓய்வைத் தந்து உடலுக்கு சக்தியை அளிப்பது போல் இந்தக் காலமும் உலகியல் ஆசைகளை நிறைவேற்றுகிறது)

இந்த தக்ஷிணாயனத்தில் செய்யப்படும் செயல்களால் பிறப்பற்ற நிலை வாய்ப்பாதில்லை. இதனால் இது பித்ருக்களின் பாதை எனப்பட்டது. ஆத்ம ஞானம் மற்றும் ஆத்ம தரிசனம் நிகழ வாய்ப்பில்லாததால் இது ஜடப்பொருள் என்கிறது ஸ்லோகம். மேலும் உலகியல் பயன்களால் உடலுக்கான வலிமையே அதிகப்படும் என்பதாலும் இது ஜடப்பொருள்.

> அதோத்தரேண தபஸா ப்ரஹ்மச்சர்யேண ச்ரத்தயா வித்யயா ஆத்மானம் அன்விஷ்ய ஆதித்யம் அபிஜயந்தே ஏதத் வை ப்ராணானாம் ஆயதனம் ஏதத் அம்ருதம் அபயம் ஏதத் பராயணம் ஏதஸ்மான்ன புனராவர்த்தந்த இத்யேஷ நிரோத: ததேஷ ஸ்லோக:

பிறகு உத்ராயண காலத்தில் தவம், ப்ரஹ்மச்சர்யம், ச்ரத்தை, கல்வி மற்றும் வழிமுறைகளால் ஆத்மாவை தேடுபவர்கள் ஆதித்யப்பாதையை அடைகிறார்கள். இதுவே உயிர்கள் அடையத்தகுந்தது. இது மரணத்தை வெல்வது. இது அச்சத்தை விட்டொழித்தது. இது மேலானப் பாதை. இந்த வழியில் செல்பவர்கள் மீண்டும் பிறப்பதில்லை. இதுவே கட்டுப்படுத்துகிறது. இது பற்றி மேலும் ஸ்லோகம் உள்ளது.

காலம் அல்லது வருடத்தின் இரண்டு பகுதிகள் உண்டு என்று பார்த்தோம். முந்தைய ஸ்லோகம் தக்ஷிணாயனம் பற்றிப் பேசியது. இந்த ஸ்லோகம் உத்ராயண காலத்தைப் பற்றி விளக்குகிறது. உத்ராயண காலத்தில் செய்யப்படும் செயல்முறைகள் யாவும் ஆத்ம ஞானத்தையும் ஆத்ம தரிசணத்தையும் தரக்கூடியது. ஆத்ம ஞானம்

வாய்ப்பதால் இதுவே உயிர்கள் அடையத்தகுந்தது. இது மரணமற்ற நிலைக்கு வழி. இதில் பயம் என்பது இல்லை.

இத்தகைய பாதை சூரியப்பாதை என்றே பல உரைகளிலும் கூறப்படுகிறது. ஆனால் 'ஆதித்ய' என்ற சொல் சூரியனையும் ப்ரபஞ்சத்தின் ஆதார சக்தியையும் குறிக்கும். இந்தப் பாதையில் செல்பவர்கள் ப்ரபஞ்சத்தின் மூல சக்திகளோடு தொடர்பு கொள்கிறார்கள். இத்தகைய தொடர்பால் ஆத்மஞானம் கிடைக்கிறது. ஆத்மஞானம் அடைவதால் மீண்டும் பிறப்பதில்லை. இவ்வாறாக மரணமற்ற நிலையை அடைவதை இது கட்டுப்படுத்துகிறது.

தக்ஷிணாயனம் என்பது இரவு, உத்ராயணம் பகல் என்று பார்த்தோம். இரவில் நம் உடலுக்குத் தேவையான சக்தி கிடைக்கிறது. பகலில் அந்த சக்தி செலவழிக்கப்பட்டு செயல்களின் காரணமாக அனுபவம், அறிவு போன்றவை அடையப்படுகின்றன. அவ்வாறான அனுபவங்களும் அறிவும் சரியான முறையில் புரிந்து கொள்ளப்பட்டால் அது ஆத்மாவைப் பற்றிய தேடலில் முடியும். ஆத்மாவைத் தேட, ஆத்ம ஞானமும் ஆத்ம தரிசனமும் கிடைக்கும்.

ஆத்ம தரிசனம் அல்லது ஆத்மாவைப் பற்றிய விழிப்புணர்வு பிறவியில்லாத நிலையைத் தரும். பிறப்பில்லாததால் மரணத்தை வெல்கிறார்கள்.

> பஞ்சபாதம் பிதரம் த்வாதசாக்ருதிம் திவ ஆஹ{ பரே அர்த்தே புரீஷிணம் அதேமே அன்ய உ பரே விசக்ஷணம் ஸப்தசக்ரே ஷடர ஆஹ{ரர்ப்பிதமிதி.

ஐந்து பாதங்களை உடையது, தந்தை, பன்னிரண்டு உருவங்கள் உடையது என்று சிலர் மேலான இடத்திலிருந்து புகழ் மொழிகளைப் பொழிகிறார்கள். மற்றும் வேறு சிலரோ, மேலானது, அனைத்தையும் சாட்சியாக கவனிப்பது, ஏழு சக்கரங்கள் கொண்டது. ஆறானது என்று இவ்வாறு சொல்கிறார்கள்.

இந்த ஸ்லோகம் ஆதித்யன் என்ற ஆதார சக்தியைப் பற்றி விளக்குகிறது. ஆனால் இந்த விளக்கம் சூரியனுக்கும் பொருந்தி நிற்பது உணரத்தக்கது.

ஐந்து பாதங்கள்: பாதங்கள் என்பவை உடலைத் தாங்குபவை. ஆதித்யன் என்ற சக்தியைத் தாங்கி நிற்பவை நிலம் முதலான பஞ்ச பூதங்கள்.
தந்தை: ஒரு உயிரினத்திற்கு உடலைத் தருபவள் தாய். உயிரைத் தருபவன் தந்தை. ஆதித்யன் எனும் சக்தி, ஜடப்பொருட்களுக்கு உயிரூட்டுவதால் தந்தை.
பன்னிரண்டு உருவங்கள். ஆதித்யன் என்ற இந்த ஆதார சக்தியானது பன்னிரண்டு வகைகளாக வெளிப்பட்டது என்று வேத நூல்கள் குறிப்பிடுகின்றன.
மேலான இடத்திலிருந்து....: இவ்வாறு சொல்பவர்கள் சாதாரன மனிதர்கள் அல்ல என்பதை இது குறிக்கிறது. ஆத்ம தரிசனம் பெற்ற ஆத்ம ஞானிகளையே இது குறிப்பிடுகிறது.
சாட்சியாக கவனித்தல்: 'விசக்ஷணம்' என்ற சொல் அற்புதமானது. வேண்டுமை வேண்டாமை இல்லாத அந்த ஆதார சக்தி எல்லாவற்றையும் சாட்சியாக கவனிக்கிறது.
ஏழு சக்கரங்கள்: உயிர்கள் நிலைபெற்றிருக்க உணர்வுகள் இன்றியமையாதவை. அந்த உணர்வுகள் யாவும் ஏழு வகைகளில் அடங்கும். அவ்வாறான ஏழு வகை உணர்வு நிலைகளாலேயே ப்ராணனின் பயனம் நடைபெறுகிறது என்பதால் ஏழான உணர்வு நிலைகள் ஏழு சக்கரங்களாகக் குறிப்பிடப்படுகிறது.
ஆறானது: மனித உடலில் பல்வேறான 108 சக்தி மையங்கள் உள்ளன. அவற்றை சக்கரங்கள் என்று யோக சாஸ்திரம் அழைக்கிறது. அவற்றில் முக்கியமானவை ஆறு சக்கரங்கள்.(ஆதாரம் ஆறினையும்... என்று சித்தர்களும் இவற்றைக் குறிப்பிட்டிருப்பது உணரத்தக்கது) அந்த ஆறு சக்தி மையங்களே உணர்வு நிலைகளையும், உணர்வுகளால் உடல் நிலையையும் கட்டுப்படுத்துகின்றன. எனவே ஆதித்தன் என்ற ஆற்றல் ஆறு சக்தி மையங்களில் செயல்படுவதால் 'ஆறானது' என்று இந்த ஸ்லோகம் குறிப்பிடுகிறது.

> மாஸோ வை ப்ரஜாபதிஸ்தஸ்ய க்ருஷ்ணபக்ஷ ஏவ ரயி: சுக்ல: ப்ராணஸ்தஸ்மாதேத ரிஷய சுக்ல இஷ்ட்டம் குர்வந்தீதர இதரஸ்மின்

மாதமே நிச்சயமாக படைப்புக்கடவுள். அவரது தேய்பிறைக் காலமே ஜடப்பொருள். வளர்பிறைக்காலம் ப்ராணன். அதனால் ரிஷிகள் தங்கள் யாகங்களை வளர்பிறையில் செய்கிறார்கள். மற்றவர்கள் மற்றதில்.

முந்தைய ஸ்லோகம் வரை 'காலம்' என்பதை சூரியனை பூமி சுற்றிவரும் கால அளவான வருடத்தால் பார்த்த நாம் இங்கே சந்திரன் சுழற்சியை – மாதத்தை – காலமாகக் காண்கிறோம். மாதம் ஒன்றை படைப்புக்கடவுளாகக் கொண்டால் தேய்பிறைக் காலம் ஜடப்பொருள், வளர்பிறைக்காலம் ப்ராணன் என்கிறது ஸ்லோகம்.

இதனை நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். சந்திரன் சுழற்சியை வைத்து வழங்கப்படுபவை சாந்த்ரமான மாதங்கள். அமாவாசைக்கு அடுத்த நாளான ப்ரதமை முதல் பௌர்னமி வரை வளர்பிறைக் காலம். பௌர்னமிக்கு அடுத்த ப்ரதமை முதல் அமாவாசை வரை தேய்பிறைக்காலம். தேய்பிறைக் காலம் ஏன் ஜடப்பொருள் எனப்படுகிறது?

சந்திரன் என்பது மனதைக் குறிக்கும். தேய்பிறைக்காலம் என்பது இருளை – அமாவாசையை – நோக்கிச் செல்வது. நாம் முண்பே கண்டது போல் உயிர்கள் தனக்கான சக்தியைப் பெற்றுக்கொள்வது இருளில்தான் முடியும். பெரும்பாலான உயிர்கள் இரவில் உறங்குவது இந்த சக்தியைப் பெறுவதற்காகத்தான். அவ்வாறு சக்தியைப் பெற்றுக்கொள்ளும் பொழுது அவை அசைவுகளற்று இருக்கும். எனவே இத்தகையத் தேய்பிறைக்காலம் ஜடப்பொருள் எனப்பட்டது.

மாறாக, ஒளி சக்தியை செலவழிக்கச் செய்யும். சக்தியைச் செலவழித்து தன் வாழ்வை நடத்தும், முன்னேற்றும் காலம் ஒளிக்காலம். அவ்வாறான வளர்பிறைக்காலம் ப்ராணன் எனப்படுகிறது.

'ரிஷிகள் யாகங்களை வளர்பிறையில் செய்கிறார்கள'; என்று ஸ்;லோகம் குறிப்பிடுகிறது. ரிஷி என்பவர் ஆத்ம தரிசனம் பெற்று, அந்த ஆத்ம அனுபூதியை அனைவரும் பெறுவதற்கான வழிமுறைகளை உலகிற்கு அளிப்பவர். எப்படி ஒரு விஞ்ஞானி, தான் ஆய்நதறிந்தவற்றை உலக நன்மைக்காக, அனைவரும் அந்த

ஆய்வினைச் செய்வதற்காக, சூத்திரங்களை வெளியிடுகிறாரோ அவ்வாறே மெய்ஞான சூத்திரங்களை – மந்திர, தந்திர நுட்பங்களை – வெளியிடுபவர் ரிஷி. அவ்வாறான ரிஷிகள் யாகங்களைச் செய்வது எந்த ஒரு தனிப்பட்ட நோக்கமும் இல்லாமல்தான். உலகியல் நலன்களைக் கருதாமலும், தான் பெற்ற பேரானந்த நிலைக்கான நன்றியுரைத்தலாகவும், சூத்திரங்களை வகுப்பதற்காகவும் செய்யப்படும் யாகங்கள், வளர்பிறைக் காலத்தில் செய்யப்படுவது பொருத்தமானது தானே?

'மற்றவர்கள் மற்றதில்' என்பது என்ன? ரிஷிகளைத் தவிர மற்றவர்கள் யாகங்கள், யக்ஞங்களைச்செய்வது உலகியல் நன்மைகளுக்காகத்தான். அவ்வாறான நோக்கங்களுக்கான செயல்பாடுகள், சக்தி சேகரிக்கப்படக்கூடிய தேய்பிறைக் காலத்தில் செய்யப்படும் என்கிறது ஸ்லோகம்.

> அஹோராத்ரோ வை ப்ரஜாபதிஸ்தஸ்யாஹரேவ ப்ராணோ ராத்ரிரேவ ரயி: ப்ராணம் வா ஏதே ப்ரஸ்கந்தந்தி யே திவா ரத்யா ஸம்யுஜ்யந்தே ப்ரஹ்மசர்யமேவ தத்யத்ராத்ரௌ ரத்யா ஸம்யுஜ்யந்தே.

பகலிரவாகும் நாள் நிச்சயமாகப் படைப்புக்கடவுள். அவரது பகல் பொழுது ப்ராணன். இரவுப்பொழுது ஜடப்பொருள். யார் பகலில் உடலுறவு கொள்கிறார்களோ, அவர்கள் சக்தியை வீணாக்குகிறார்கள். இரவில் உறவு கொள்வது ப்ரஹ்மச்சர்யமே.

முந்தைய ஸ்லோகத்தில் சந்திரனின் நகர்வை, மாதத்தைப் படைப்புக்கடவுளாகப் பார்த்தோம். இங்கு பூமியின் சுழற்சியால் ஏற்படும் பகலிறவு கொண்ட ஒரு நாள் படைப்புக்கடவுளாகக் கொள்ளப்படுகிறது. இவரது பகல் - ஒளிப்பொழுது – ப்ராணன். ஒளியற்ற இரவுப்பொழுது ஜடப்பொருள். சக்தியை செலவழித்து வாழ்க்கை வளங்களை அடைய வேண்டிய பகல் பொழுதில் யார் உடலுறவு கொள்கிறார்களோ, அவர்கள் சக்தியை வீணாக்குபவர்களே.

சக்தியை சேகரிக்கும் இரவுப்பொழுதில் மட்டுமே உடலுறவு கொள்ளவேண்டும். உடலுறவில் சக்தி பரிமாறப்படுகிறது. சக்தியை

ப்ரபஞ்சத்திலிருந்து பெறக் கூடிய இருள் பொழுதில் உறவு கொண்டால், உறவால் இழக்கப்படும் சக்தியும் ஈடு செய்யப்படும். மாறாக, ஒளிப்பொழுதில் உறவு கொள்பவன் செலவழிக்கும் சக்தி ஈடு செய்யப்படுவதில்லை.

உடலுறவு என்பது மனிதகுலம் தழைத்தோங்க அவசியம். எனவேதான், இரவில் உறவு கொள்வதும் ப்ரஹ்மச்சர்யமே என்கிறது ஸ்லோகம்.

வேத காலத்தில் 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற கோட்பாடு இல்லை. எனவே, பிற்காலத்தில் தோன்றி, பல வியாக்யானங்களை எழுதிய ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதர் தம் விளக்கவுரையில், "இரவில், மனைவியுடன் மட்டும், உடலுறவு கொள்ளுதல்' என்று இதை விளக்குகிறார்.

அன்னம் வை ப்ரஜாபதிஸ்ததோ ஹ வை த்த்ரேதஸ் தஸ்மாதிமா
ப்ரஜா ப்ரஜாயந்த இதி.

உணவே படைப்புக்கடவுள். உணவிலிருந்தே விந்து உண்டாகிறது. அதுவே உயிர்கள் உருவாகக் காரணம்.

இங்கு உணவு என்பதை அப்படியே எடுத்துக்கொள்ளக்கூடாது. உண்ணும் உணவு மட்டுமின்றி நம் உடலிலும் உள்ளத்திலும் சக்தியை நிரப்பி, உயிர்களை உருவாக்கும் வித்துக்களை பலமடையச் செய்யும் எல்லாமே உணவுதான். உணவாலேயே சக்தி உருவாகி, அச்சக்தியினாலேயே உயிர்கள் உருவாவதால் உணவே படைப்புக்கடவுளாகிறது.

தத் யே ஹ வை தத் ப்ரஜாபதிவ்ரதம் சரந்தி தே
மிதுனமுத்பாதயந்தே
தேஷாமேவைஷ ப்ரஹ்மலோகோ யேஷாம் தபோ ப்ரஹ்மச்சர்யம்
யேஷு ஸத்யம் ப்ரதிஷ்ட்டிதம்

யார் அந்த படைப்புக்கடவுளின் - முன்னொரு காலத்தில் நிச்சயமாக நடந்த – அந்த நியதியைக் கடைபிடிக்கிறார்களோ, அவர்கள் ஜோடிகளை உருவாக்குகிறார்கள். யாரிடம் தவமும் ப்ரஹ்மச்சர்யமும்

ஸத்யமும் நிலைபெற்றிருக்கிறதோ அவர்களுக்கு மட்டுமே ப்ரஹ்மலோகம் வாய்க்கிறது.

படைப்புக்கடவுளின் நியதி என்பது ஜடப்பொருளையும் ப்ராணனையும் இனைப்பது. இந்த நியதியைக் கடைபிடிப்பவர்கள் அந்த இரண்டும் சேர்ந்த ஜோடிகளான உயிர்களை உருவாக்குகிறார்கள்.

தவம் என்பது ஒருமித்த சிந்தனை. ஒருமித்த சிந்தனையும், நியதி மாறாது ஒழுகுதலும், ஸத்யமும் யாரிடம் நிலைபெற்றிருக்கிறதோ அவர்களுக்கே ப்ரஹ்மலோகம். தவத்திலோ, ப்ரஹ்மச்சர்யத்திலோ நாடகம் ஆட வேண்டாம் என்கிறது இந்த ஸ்லோகம்.

தேஷாமஸௌ விரஜோ ப்ரஹ்மலோகோ ந யேஷு
ஜிஹ்மமன்ருதம் ந மாயா சேதி

அவர்களுக்கே அந்த புனிதத்திற்கு அப்பாற்பட்ட ப்ரஹ்மலோகம். சூதும் பொய்யும் உடையவர்களுக்கு, வஞ்சனை உள்ளவர்களுக்கு இல்லை.

முந்தைய ஸ்லோகம் சொன்னதை இது உறுதிபடுத்துகிறது. 'விரஜம்' என்றால் புனிதம், புனிதமற்றது இரண்டிற்கும் அப்பாற்பட்டது என்று பொருள். படைப்புக்கடவுளே அனைத்திற்கும் மூலம். அவ்வாறிருக்க, அவரிடத்தில் புனிதத்திற்கும் புனிதமற்றதற்கும் வேறுபாடு இருக்க முடியாது. அதனால் தான் ப்ரஹ்ம லோகம் புனிதத்திற்கு அப்பாற்பட்டது என்று குறிப்பிடப்படுகிறது.

<u>இவ்வாறாக ப்ரச்ன உபநிஷதத்தின் முதல் அத்தியாயம்</u>.

இந்த கேள்வி, நாம் முன்பே குறிப்பிட்டது போல் மூலாதாரம் எனும் சக்தி நிலையிலிருந்து எழுவது. எனவேதான், சாதாரனமானதாகத் தோற்றமளிக்கும் ஒரு கேள்விக்கு இவ்வளவு விளக்கம் அளிக்கப்பட்டது. உயிரிணங்களின் தோற்றத்தை மட்டுமல்லாது, படைப்புக் கடவுளைப் பற்றியும் ப்ரஹ்மச்சர்யம் பற்றியும் விரிவாகப் பேசப்பட்டது. மூலாதார மையத்தின் இயல்பான இயக்கத்திற்கு தடையாயிருப்பவை 'காமம், க்ரோதம், அதீதக் கற்பனை,

போன்றவை. இவை நீக்கப்பெற்றால், நம் உடலின் சக்தி பெருகி, அற்புதமான சந்ததிகளை உருவாக்கும்.

## இரண்டாம் கேள்வி

அத ஹைனம் பார்க்கவோ வைதர்பி பப்ரச்ச பகவன் கத்யேவ தேவா: ப்ரஜாம் விதாரயந்தே? கதர ஏதத் ப்ரகாசயந்தே க: புனரேஷாம் வரீஷ்ட்ட இதி.

பிறகு விதர்ப்ப நாட்டைச் சேர்ந்த பார்க்கவன் கேட்டான், "ஆசிர்வதிக்கப்பட்டவரே, எத்தனை தேவர்கள் இந்த உயிர்களைத் தாங்குகிறார்களா?;, யார் இயக்குகிறார்கள்?, உயர்ந்தவர் யார்?

கேள்வியைப் புரிந்து கொள்ளுங்கள். எந்த உயிரினத்தையும் பல்வேறு சக்திகள் ஆதாரமாகயிருந்து தாங்குகின்றன, பல சக்திகள் அவற்றை இயங்கச் செய்கின்றன. இவ்வாறான சக்திகள் எவை என்பது கேள்வி.

இந்தக் கேள்வி, நம் உடலில் உள்ள சக்தி மையங்களில் 'ஸ்வாதிஷ்டாணம்' என்ற சக்தி மையத்திலிருந்து எழும் கேள்வியாகும். அச்சம் இந்தக் கேள்வியின் ஆதாரம். அச்சம் நீங்கி நிர்ப்பய நிலைப் பிறந்தால் மட்டுமே உடலின் மாசுக்கள் நீங்கும்.

சாதாரணமாக, அச்சம் இரண்டு வகைப்படும். அடிப்படையாகவும், இயல்பாகவும் ஏற்படும் அச்சம் ஒரு தற்காப்பு அம்சமாகும். அந்த அச்சம் அவசியமானதே.

ஆனால் மற்றொரு வகை அச்சம் தவிர்க்கப்படக்கூடியது. இந்த வகை அச்சம், மனதில் சலனங்களை ஏற்படுத்துவதோடு உடலிலும் பல கேடுகளை உருவாக்க வல்லது. ஆதாரத்தைப் பற்றிய இந்தக் கேள்வியும் இந்த வகையைச் சார்ந்ததே. இந்த பயத்தைப் போக்கும் பதிலைப் பார்ப்போம்.

தஸ்மை ஸ ஹோவாச ஆகாசோ ஹ வா ஏஷ தேவோ வாயுரக்னிராப: ப்ருதிவீ வாங்மனச்சக்ஷு ச்ரோத்ரம் ச தே ப்ரகாச்யாபிவதந்தி வயமேதத் பாணமவஷ்ட்டப்ய விதாரயாம:

அவரிடம் பிப்பலாத ரிஷி கூறினார், "அந்த தேவர்கள் (சக்திகள்) ஆகாசம், காற்று, நெருப்பு, தண்ணீர், நிலம், பேச்சு, மனம், பார்வை மற்றும் கேட்கும் தன்மை. அவை இயக்கி 'நாங்களே உடம்பை ஒருங்கினைத்துத் தாங்குகிறோம்' என்றன"

இந்த ஸ்லோகம் சற்றுக் கடினமானது. 'உயிர்களை எந்தெந்த சக்திகள் தாங்குகின்றன? இயக்குகின்றன?" என்பது கேள்வி. இதற்கு ரிஷி, "ஆகாசம் முதலான பஞ்ச பூதங்களும் பேச்சு, மனம், பார்வை மற்றும் கேட்கும் தன்மை" என்று பதிலளிக்கிறார்.

இந்த பதிலில் பஞ்ச பூதங்கள் உடம்பை;த் தாங்குவதை நாம் புரிந்து கொள்ள முடியும். ஆனால், பேச்சு, மனம், பார்வை மற்றும் கேட்கும் தன்மைகள் என்பது எப்படி? பேச்சு, பார்வை, கேட்கும் தன்மை இல்லாதவர்களும் இருக்கிறார்களே?

ஸ்லோகத்தின் வார்த்தைகளை நூலறிவுக் கொண்டு புரிந்து கொள்ள முடியாது. பேச்சு, பார்வை போன்றவற்றைக் குறிப்பிட்டது பஞ்ச ஞானேந்த்ரியங்களை. இந்த அறிபொறிகளுக்கான சக்தி எல்லா மனிதர்களிடமும் இருக்கும். புலன்களின் நலனின்மைக் காரனமாக வெளிப்படாமல் இருக்கக்கூடும்.

இந்த இடத்திலிருந்து ஸ்லோகம் ஒரு கதை போலத் தொடர்கிறது. மேலே குறிப்பிடப்பட்ட சக்திகள் தாமே உடம்பை ஒருங்கினைத்து இயக்குவதாகக் கூறினவாம்.

தான் வரீஷ்ட்ட: ப்ராண உவாச மா மோஹமாபத்யத அஹமேவைதத் பஞ்சதாத்மானம் ப்ரவிபஜ்யைதத் பாணம் அவஷ்ட்டப்ய விதாரயாமீதி: தேSச்சரத்தானா பபூவு:

அவற்றுள் முக்கியமானப் ப்ராணன் கூறியது, "குழப்பத்தில் ஆழந்து போகாதீர்கள். நானே என்னை ஐந்தாகப் பகுத்துக்கொண்டு உடம்பை ஒருங்கினைத்து இயக்குகிறேன்" (மற்றவை) அதனை நம்பவில்லை.

முந்தைய ஸ்லோகத்தில் தொடங்கிய கதை தொடர்கிறது. தாமே உடம்பைத் தாங்குவதாகச் சொன்ன அந்த சக்திகளைப் பார்த்து, முக்கிய சக்தியான ப்ராணன், தானே தன்னை ஐந்தாகப் பிரித்துக்கொண்டு இயக்குவதாகக் கூறியது. அதனை மற்ற சக்திகள் நம்பவில்லை.
இந்த ஸ்லோகத்தில் முக்கியமாக ஒன்றை கவனிக்க வேண்டும்.
ப்ராணன் தன்னை 'ஐந்தாக' பிரித்துக்கொள்வதாகக் கூறுகிறது.
முந்தைய ஸ்லோகத்தில் குறிப்பிடப்பட்டவையோ பத்து (பூதங்கள் ஐந்து மற்றும் அறி பொறிகள் ஐந்து) சக்திகள்.
அறிபொறிகள் ஐந்தும் பஞ்ச பூதங்களைச் சார்ந்து இயங்குபவையே.
எனவே, ப்ராணன் கூறியது சரியானதே.

> ஸோSபிமானாதூர்த்வமுத்க்ரமத இவ தஸ்மினுத்க்ரமதி அதேதரே
> ஸர்வ ஏவோத்க்ராமந்தே தஸ்மின்ச்ச ப்ரதிஷ்ட்டமானே
> ஸர்வ ஏவ ப்ரதிஷ்ட்ந்தே தத்யதா மக்ஷிகா
> மதுகரராஜானமுத்க்ராமந்தம் ஸர்வ ஏவோமுத்க்ராமந்தே
> தஸ்மின்ச்ச பிரதிஷ்ட்டமானே ஸர்வா ஏவ ப்ரதிஷ்ட்டந்த
> ஏவம் வாங் மனச் சக்ஷு ச்ரோத்ரம் ச தே ப்ரீதா ப்ராணம்
> ஸ்துன்வந்தி

அது அன்பினால் வெளியேறுவது போல் வெளியேறியவுடன் அனைத்தும் வெளியேறின. அது நிலைபெற்றதும் யாவும் நிலைபெற்றன. அரச தேனீ வெளியேறினால் எவ்வாறு மற்ற தேனீக்களும் வெளியேறுமோ, அரச தேனீ நிலைபெற்றால் மற்றவையும் நிலைபெறுமோ அவ்வாறே ப்ராணனும் மற்ற சக்திகளும். இவ்வாறு நடந்ததைக்கண்ட அறிபொறி சக்திகள் யாவும் மகிழ்ந்து ப்ராணனைத் துதித்தன.

தேன் கூட்டில் அரச தேனீ இருக்கும் வரைதான் எல்லாத் தேனீக்களும் இருக்கும். அரச தேனீ வெளியேறினால் அனைத்தும் வெளியேறிவிடும். அவ்வாறே, ப்ராணன் வெளியேற, அனைத்து சக்திகளும் சக்தியிழந்து வெளியேறின.

ப்ராணன் வெளியேறிய போது சக்தியிழந்தவை, ப்ராணன் நிலைபெற்றவுடன் அவையும் சக்தியடைந்து நிலைபெற்றன. இவ்வாறு பஞ்ச பூத சக்திகள் வெளியேறியதால் கலக்கமுற்ற அறிபொறிகள், அவை யாவும் நிலைபெறக் கண்டு அறிபொறிகள் யாவும் மகிழ்ந்து, ப்ராணனைத் துதித்தன.
அடுத்து வரும் ஸ்லோகங்கள் அந்த துதிகள்.

ஏஷோ அக்னிஸ்தபத்யேஷ ஸ_ர்ய ஏஷ பர்ஜன்யோ மகவானேஷ வாயு:
ஏஷ ப்ருத்வீ ரயீர்தேவ: ஸதசச்சாம்ருதம் ச யத்.

அதுவே நெருப்பாக எரிகிறது, அதுவே ஸ_ர்யன், அதுவே மேகத்திற்குத் தலைவன், அது காற்று, அதுவே பூமி எனும் ஜடப்பொருளின் சக்தி, தூலமாகவும் சூக்குமமாகவும் எவையெல்லாம் அழிவற்றதாக உள்ளனவோ அவையும் அதுவே.

ப்ராண சக்தி யாவற்றிற்கும் அடிப்படையானதால், ப்ராணன் இல்லாத யாவும் ஜடப்பொருளே என்பதால், அழிவற்றதாகவும் இயக்கமுள்ளதாகவும் உள்ள அனைத்தும் ப்ராணனாகத் துதிக்கப்படுகிறது.

அரா இவ ரதநாபௌ ப்ராணே ஸர்வம் ப்ரதிஷ்ட்டிதம்
ரிசோ யஜூம்ஷி ஸாமானி ய்ஜ்ஞ: க்ஷத்ரம் ப்ரஹ்ம ச

தேர்ச் சக்கரத்தின் அச்சில் ஆரங்கள் கூடுவது போல் ப்ராணனில் வேதங்கள், யாகங்கள், வீரம், அறிவு யாவும் நிலைபெறுகின்றன.

வேதங்கள் அனுபவச்சாறு. யாகம் என்பது செயல்களைக் குறிக்கும். வீரம் என்பது உடல் ஆற்றல். அனுபவப்பதிவுகளும், செயல்பாடுகளும், உடலின் ஆற்றலும் அறிவும் ப்ராண சக்தியின்றி செயல்படாது.

ப்ரஜாபதிச்சரஸி கர்ப்பே த்வமேவ ப்ரதிஜாயஸே துப்யம் ப்ராண ப்ரஜாஸ்த்விமா பலிம் ஹரந்தி ய: ப்ராணை: ப்ரதிதிஷ்ட்டஸி.

படைப்புக் கடவுளின் இயக்கத்தில், கருக்கொள்வதில் நீயே மனைவிபோல். உனக்கு உணவினை உயிர்கள், நீ நிலைபெற்றிருக்கும் புலன்களின் மூலமாகவே கொண்டு வருகின்றன.

படைப்புக் கடவுள் ஜடப்பொருளையும் ப்ராணனையும் படைத்தார் என்று பார்த்தோம். அத்தகைய படைப்புச் செயலில், ஜடப்பொருட்களை இயங்கச் செய்வதும் வளர்ப்பதும் ப்ராணனே என்பதால் இங்கு 'கருவுற்ற மனைவி போல' என்று துதிக்கப்படுகிறது.
ப்ராணன் நிலைபெற்றிடத் தேவையானவற்றை, ப்ராணன் நிலைபெற்றி-ருக்கும் புலன்களே அளிக்கின்றன. அதாவது, புலன்களை இயக்குவதால் ப்ராணன் தன் உணவினைத் தானே வருவித்துக்கொள்கிறது.

தேவானாமஸி வஹ்னிதம: பித்ருணாம் ப்ரதமா ஸ்வதா
ரிஷீணாம் சரிதம் ஸத்யமதர்வாங்கிரஸாமஸி.

தேவர்களிடத்தில் நெருப்பாகவும், பித்ருக்களின் முதல் உணவாகவும், ரிஷிகளின் ஒழுக்கத்தில் ஸத்யமாகவும் அதர்வ-அங்கீரஸர் முதல் இருக்கிறாய்.

தேவர்கள், யாகங்களில் இடப்படும் பொருட்களால் வாழ்பவர்கள். அவர்களுக்கு அதனை ஏந்திச்செல்வது நெருப்பு. எனவே, ப்ராணன் தேவர்களுக்கு நெருப்பாக சொல்லப்பட்டது.
மரணத்தின் போது முதலில் ப்ராணன் பிரிந்து பித்ரு லோகத்தை நோக்கிச் செல்கிறது. பித்ரு லோகத்திற்கு அதுவே உணவாகும். எனவே ப்ராணன் பித்ருக்களின் முதல் உணவு எனப்பட்டது.

ரிஷிகளுக்கு, பல்வேறு ஒழுக்க நெறிமுறைகள் உண்டு. வழிமுறைகள் காரணமாக அவற்றுள் பல வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால், அவை யாவற்றிற்கும் ஆதாரமானது ஸத்யம். அந்த ஸத்யமாக ப்ராணன் இருக்கிறது என்கிறது ஸ்லோகம்.

அதர்வண வேதத்தை உலகிற்கு அளித்த அதர்வாங்கிரஸ ரிஷி, ப்ரம்மனின் - படைப்புக் கடவுளின் - முதல் மானஸ புத்திரன். எனவே அவரைக் குறிப்பிட்டு, அவரது காலம் முதல் ப்ராணன் ஸத்யமாக

இருக்கிறது என்கிறது இந்த ஸ்லோகம். அதாவது, ப்ரபஞ்சத்தின் தோற்றம் முதல் ப்ராண சக்தி ஆதாரமாக விளங்கிவருகிறது என்பதை இது குறிப்பிடுகிறது.

இந்த்ரஸ்த்வம் ப்ராண தேஜஸா ருத்ரோSஸி பரிரக்ஷிதா
த்வமந்தரிக்ஷே சரஸி ஸ_ர்யஸ்த்வம் ஜ்யோதிஷாம் பதி.

ப்ராணனே, நீயே தலைவன். நின் ஒளியால் ருத்ரனின் இடத்தைக் காக்கிறாய். நீ வான் வெளியில் சூரியனாக உலவுகிறாய். நீயே ஒளியின் அதிபதி.

ப்ராணனின் ஒளிரும் தன்மை இங்கே புகழப்படுகிறது. ருத்ரன் அழிக்கும் கடவுள். அழிக்கப்பட்ட உயிர்களின் ப்ராண சக்தி அவரது இருப்பிடத்தை அலங்கரிக்கிறது. எனவே, ப்ராணன் தன் ஒளியால் ருத்ரனின் இருப்பிடத்தைப் ப்ரகாசிக்கச் செய்கிறது.
வான்வெளியில் உலவும் ஒளிக்கடவுளான சூரியனும் ப்ராண சக்தியைச் சார்ந்தே இருக்கிறது.

யதா த்வமபிவர்ஷஸ்யதேமா: ப்ராண தே ப்ரஜா
ஆனந்தரூபாஸ்திஷ்ட்டதி காமாயான்னம் பவிஷ்யதீதி

எப்பொழுது நீ மழையாகப் பொழிகிறாயோ, (அப்பொழுது) உன் சந்ததிகள், வேண்டிய அளவு உணவு கிடைத்ததென்று ஆனந்தமாக இருக்கின்றன.

இந்த ஸ்லோகத்தை ஆழ்ந்து புரிந்து கொள்ளுங்கள். உயிர் வாழ்க்கைக்கு உணவே ஆதாரம் என்று நாம் கருதுகிறோம். ப்ராண சக்தியே உணவைவிட முக்கியமானது என்கிறது இந்த ஸ்லோகம்.

எப்பொழுது ப்ராண சக்தி மழையென உயிர்களின் உள்ளே பொழிகிறதோ, அப்பொழுது ப்ராண சக்தியால் உண்டான இந்த உயிர்கள் யாவும் உணவை வேண்டிய அளவு உண்டுவிட்ட நிறைவை எய்துகின்றனவாம். வேதகால ரிஷிகள் காற்றைப் புசித்தே உயிர் வாழ்ந்ததன் இரகசியம் இதுதான். அவர்கள் எதை உட்கொண்டார்கள்

என்பது முக்கியமல்ல. ப்ராண சக்தியை அவர்கள் தங்கள் உடலில் பெருக்கிக் கொண்டார்கள். ப்ராண சக்தியின் பெருக்கம், உணவின் தேவை இல்லாமல் செய்திருக்கிறது.

வ்ராத்யஸ்த்வம் ப்ராணைகர்ஷிரத்தா விச்வஸ்ய ஸத்பதி:
வ்யமாத்யஸ்ய தாதார: பிதாத்வம் மாதரிச்வன:

ப்ராணனே, பகுத்தறியாதவன் நீ. ஏகர்ஷி யாகத்தால் உண்பவன். உலகின் அனைத்திற்கும் தலைவன். நாங்கள் உண்ணத் தக்கவற்றைத் தருபவன். காற்றின் தந்தையும் நீ.

ப்ராண சக்திக்கு நல்லவை- அல்லவை என்ற பாகுபாடு கிடையாது. எனவே 'பகுத்தறியாதவன்' எனப்பட்டது.
ஏகர்ஷி யாகம் என்பது அதர்வண வேதத்தினுடையதாக இருந்திருக்கக் கூடும். யாகங்களால் ப்ராண சக்தி உலகில் நிலைநிறுத்தப் படுவதால், ப்ராணன் 'ஏகர்ஷி யாகத்தில் உண்பவன்' எனப்பட்டது.
ப்ராண சக்தி இல்லாதவற்றை உட்கொள்வதால் நமக்கு பலன் ஏதும் இல்லை என்பதால் 'உண்ணத் தக்கவற்றை தருபவன்' எனப்பட்டது.
பஞ்ச பூதங்களும் ப்ராணனாலேயே இயக்கம் பெறுகின்றன என்பதாலும், உள் வெளி மூச்சாகிய காற்றினாலேயே நம் உடலில் ப்ராண சக்தி ப்ரவேசிக்கிறது என்பதாலும் ப்ராணன் காற்றின் தந்தை எனப்படுகிறது.

யா தே தனூர்வாசி ப்ரதிஷ்ட்டிதா யா ச்ரோத்ரே யா ச சக்ஷுஷீ
யா ச மனஸீ ஸந்ததா சிவாம் தாம் குரு மோத்க்ரமீ

எந்த உனது அம்சம் பேச்சில், கேட்கும் சக்தியில், பார்வையில், மனதில் வ்யாபித்துள்ளதோ, அவை அமைதியாக நிலைபெறட்டும். மேலே கிளம்பி விடாதே.

இந்த அத்தியாயத்தின் தொடக்கத்தில் ப்ராண சக்தி வெளியேறியதைப் பார்த்தோம். அதனைத் தொடர்ந்தே புலன்கள் ப்ராணனைப் புகழ்கின்றன. இறுதியாக, ப்ராணன் எல்லாப் புலன்களிலும் அமைதியுடன் நிலைபெறுமாறும், மீண்டும் வெளியே கிளம்பி விட

வேண்டாம் என்றும் ப்ரார்த்திக்கப்படுகிறது.

ப்ராணஸ்யேதம் வசே ஸர்வம் த்ரிதிவே யத் ப்ரதிஷ்ட்டிதம்
மாதேவ புத்ரான் ரக்ஷஸ்வ ஸ்ரீச்ச ப்ரஜ்ஞாம் ச விதேஹி.

மூன்று உலகங்களிலும் எவையெல்லாம் நிலைபெற்று உள்ளனவோ அவை யாவும் ப்ராணனின் வசத்திலேயே உள்ளது. தாய் தன் குழந்தையைக் காப்பது போல், ப்ராணனே எங்களைக் காப்பாயாக! ப்ரகாசத்தையும் விழிப்புணர்வையும் எங்களிடம் கலந்திருக்கச் செய்வாயாக.

'ஸ்ரீ' என்ற சொல்லிற்கு செல்வம், விஷம், நல்லபாம்பு, புகழ் அல்லது ஒளி பரவச்செய்தல், திருமகள் போன்ற பல பொருள் உண்டு. புலன்கள் ப்ராணனை வேண்டுவதாக உள்ளதால் 'ப்ரகாசம்' என்ற பொருள் எடுத்தாளப்பட்டுள்ளது. தத்தம் வேலைகளில் சிறந்து விளங்கும் புலன்கள் புகழொளியால் ப்ரகாசிக்கும்.

'விதேஹி' என்ற சொல்லையும் புரிந்து கொள்ளுங்கள். தேஹி என்றால் கொடு என்று பொருள். ந தேஹி என்றால் கொடுக்காதே என்று பொருள். விதேஹி என்பது கொடுத்தல், கொடுக்காதிருத்தல் இரண்டிற்கும் அப்பாற்பட்டது. இந்த நிலையைக் குறிப்பிடவே 'கலந்திருத்தல்' என்ற சொல் பயன்படுத்தப்ப்ட்டிருக்கிறது.

<u>இவ்வாறு ப்ரச்ன உபநிஷதத்தின் இரண்டாம் அத்தியாயம்.</u>

## <u>மூன்றாம்; கேள்வி</u>

அத ஹைனம் கௌசல்யச்சாச்வலாயன: பப்ரச்ச. பகவன் குத ஏஷ ப்ராணோ ஜாயதே? கதமாயாத்யஸ்மின் சரீரே ஆத்மானம் வா ப்ரவீபஜ்ய? கதம் ப்ராதிஷ்ட்டதே? கேனோத்க்ரமதே? கதம் பாஹ்யமபிதத்தே? கதமத்யாத்மிதி.

பிறகு அசவலரின் மகனான கௌசல்யம் கேட்டான், "ஆசிர்வதிக்கப்பட்டவரே, இந்தப் ப்ராணன் எங்கிருந்து பிறந்தது? எப்படி இந்த உடம்பினுள் வருகிறது? எவ்வாறு தன்னைப் பகுத்துக்கொண்டு

உடம்பில் நிலைபெறுகிறது? எதனால் வெளியேறுகிறது? எப்படி புறவுலகைத் தாங்குகிறது? எப்படி அகவுலகைத் தாங்குகிறது?"

முந்தைய அத்தியாயத்தின் கேள்வி அச்சத்தின் உச்சத்தில் எழுந்தது என்பதைப் பார்த்தோம். அடுத்து வரும் இந்தக் கேள்வி 'கவலை' என்ற தளத்திலிருந்து – தந்திர சாஸ்திரப்படி ஆதார சக்தி மையங்களில் ஒன்றான 'மணிபூரகம்' என்ற சக்தி மையத்திலிருந்து – எழுந்திருக்கிறது.

ப்ராணனின் மகிமையை விளக்கி, நம்மைத் தாங்குகின்ற சக்தி எது என்ற அச்சத்தை விலக்கினார் முனிவர். அச்சம் விலகியதும், அத்தகைய முக்கியமானப் பராண சக்தியைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்ற கவலை எழுவது இயல்புதானே?

கவலை என்ற மாய வலையை அறுத்தெரியும் விடையைப் பார்ப்போம்.

தஸ்மை ஸ ஹோவாசாதிப்ரச்னான் ப்ருச்சஸி
ப்ரஹ்மிஷ்ட்டோSஸீதி தஸ்மாத் தேSகம் ப்ரவீமி

அவனிடம் பிப்பலாத முனிவர் கூறினார், "கடினமான கேள்விகளைக் கேட்கிறாய். இறை நாட்டமுள்ளவனாக இருப்பதால் நான் உனக்கு பதில் கூறுகிறேன்"

ப்ராணனின் மகிமையைப் பற்றி முந்தைய அத்தியாயத்தில் விளக்கிக் கூறியவர் இவர்தான். அவ்வாறு விளக்கப்பட்ட, மகிமையுள்ள ப்ராண சக்தியைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள விழைவது இயல்புதானே? அதற்கான விளக்கமும் இவரிடம் இருக்க வேண்டும் அல்லவா?

அவ்வாறானால் 'கடினமான கேள்விகளைக் கேட்கிறாய்' என்று ஏன் சொல்லவேண்டு;ம்?

கேள்வி கடினமானதல்ல. பதில் மிக நுட்பமானது. பதிலை கேள்வி கேட்பவர் ஆழ்ந்து புரிந்து கொள்ள வேண்டும் என்பதால்தான் கேள்வியைக் கடினம் என்கிறார் முனிவர்.

மேலும், சந்தேகத்திற்கு விடையளித்து விடலாம், பயத்தை தெளிவிக்கலாம். ஆனால், கவலை என்பது மாய வலை. இதிலிருந்த ஒருவரை விடுவிப்பது மிகக் கடினமானது. கவலை எழுப்பும் கேள்விகளுக்கு விடை அளிக்கப்பட்டாலும் அந்த விடைகளிலிருந்து மேலும் கேள்விகளை உருவாக்கிவிடும் அந்தக் கவலை. கவலை என்பதே "மனதில் மீண்டும் மீண்டும் எழுந்து, பதட்டத்தை உருவாக்கும் ஒரு எண்ணத்தொகுப்பு"

ஆத்மன ஏஷ ப்ராணோ ஜாயதே யதைஷா புருஷே சாயா
ஏதஸ்மின் ஏததாததம் மனோக்ருதேனாயாதி அஸ்மின் சரீரே

ஆத்மாவிலிருந்து இந்த ப்ராணன் தோன்றுகிறது. மனிதனும் அவனது நிழலையும் போல ஆத்மாவும் ப்ராணனும் உடலில் வியாபித்துள்ளது. மனத்தின் செயல்பாடுகளால் அது இந்த உடலில் வருகிறது.

ப்ராணன் பிரம்மத்தினால் படைக்கப்பட்டது என்பதை முதல் அத்தியாயத்தில் பார்த்தோம். ப்ரம்மமும் ஆத்மாவும் ஒன்றே என்பதால் இங்கு ப்ராணன் ஆத்மாவிலிருந்து தோன்றுவதாகக் கூறப்படுகிறது.

ப்ராணன் ஆத்மாவிலிருந்து தோன்றினாலும் அவை இரண்டும் பிரிக்கமுடியாதபடி இனைந்துள்ளவை. மனிதனும் அவனது நிழலும் வெவ்வேறானவை. மனிதனிலிருந்தே நிழல் உருவாகிறது. ஆனால் மனிதனையும் அவன் நிழலையும் பிரிக்க முடியாது. அதுபோலவே ஆத்மாவும் ப்ராணனும் அமைந்திருக்கின்றன.

மனிதனும் நிழலும் பிரிக்கமுடியாதவையாக இருந்தாலும் மனிதன் இருக்கும்போதெல்லாம் நிழலும் இருக்கும் என்று சொல்ல முடியாது. அதுபோலவே ப்ராணன் செயல்படாமல் இருக்க, ஆத்ம சக்தி மட்டுமே இயங்கக்கூடும். தாயின் வயிற்றிலுள்ள கரு தோன்றும்பொழுதே ஆத்மா அதற்குள் உள்ளது. ஆனால், முதல் நான்கு

மாதங்கள் வரை கருவானது தாயின் மன அசைவுகளையே தன்னுடையதாகக் கொண்டு வளர்கிறது. ஐந்தாவது மாதத்தில் தான் கருவுக்கென்று தனியாக ஒரு மனம் உண்டாகிறது. (கருவின் வளர்ச்சி பற்றி சிவகீதை விரிவாக எடுத்துரைக்கிறது). அவ்வாறு மனம் உண்டாகி, அதில் எண்ணங்கள் ஏற்படும்போதுதான் ப்ராணன் உடலில் வியாபிக்கின்றது.

இங்கு ஒரு கேள்வி எழும். ப்ரம்மமே ஆத்மா. மனிதனில் ஆத்மா பரவியிருக்க, ப்ரம்மத்தால் படைக்கப்பட்ட ப்ராணன் வர வேண்டிய அவசியம் என்ன? ப்ரம்மமே ஆத்மா. ப்ரம்மமும் ஆத்மாவும் பதிவுகளற்றவை. மனிதனின் வினைப்பதிவுகளை சுமந்து செல்ல, அவனது செயல்பாடுகளை நிர்வகிக்க, ப்ராணன் அவசியமாகிறது. அதாவது, ஆத்மா, ப்ராணன் இரண்டும் நிரந்தரமானர்து, அழிவற்றது என்றாலும் ஆத்மா பதிவுகளற்றது. ப்ராணன் வினைப்பதிவுகளை சுமப்பது.

மனதின் செயல்பாடு என்பது எண்ணங்கள். எண்ணங்கள் உருவாவதாலேயே ப்ராணன் வருகிறது என்கிறது ஸ்லோகம். இதனை ஆழமாகப் புரிந்து கொள்ளுங்கள். மனதின் செயல்பாடுகளால் - எண்ணங்களால் தான் - ப்ராணன் உடலில் வருகிறது என்றால் ப்ராணனை இந்த உடலிலேயே நிலைநிறுத்த, எண்ணங்களைச் சீரமைத்தால் போதுமானது என்றாகிறது. வேதகால ரிஷிகள் பல்லாயிரம் ஆண்டுகள் தவத்திலேயே கழித்தனர் என்று படிக்கும்போது நமது அற்ப ஆயுளை நினைத்து நமக்குள் ஒரு அவநம்பிக்கை – எழுதப்பட்டிருப்பவை மிகைப்படுத்தப்பட்டவை என்பதாக – ஏற்படும். ஆனால், சிந்தனையை பூரணமாக அடக்கி, எண்ணங்களற்ற நிலையில தவத்தில் மூழ்கும் ரிஷிகளின் உடம்பில் ப்ராணன் பிரியாமல் இருந்ததன் இரகசியம் இதுதானோ?

யதா ஸம்ராடேவ அதிக்ருதான் வீனியுங்க்தே  ஏதான் க்ராமானேதான்
அதிதிஷ்ட்டஸ்வேதி ஏவமேவைஷ ப்ராண இதரான் ப்ராணான் ப்ருதக்ப்ருதகேன ஸன்னிதத்தே.

எவ்வாறு அரசனானவன் அதிகாரிகளை நியமித்து, "இந்த க்ராமங்களை நிர்வகியுங்கள்" என்று சொல்வானோ அவ்வாறே ப்ராணன் மற்ற ப்ராணன்களை நியமிக்கிறது.

அரசன், அதிகாரிகளை நியமிக்கும்போது நிர்வகிக்கத் தேவையான அவர்களது திறமைகளை முழுமையாக ஆராய்ந்து, அவ்விதம் நிர்வகிக்கத் தேவையான அதிகாரங்களையும் வழங்குகிறான். அவ்வாறே, ப்ராணனும். மற்ற ப்ராணன்களை, அவற்றின் இயல்புக்கேற்ப செயலில் ஈடுபடுத்துகிறது.

> பாயூபஸ்தேSபானம் சக்ஷு ச்ரோத்ரே முகநாஸிகாப்யாம்
> ப்ராணம் ஸ்வயம் ப்ராதிஷ்ட்டதே. மத்யே து ஸமான: ஏஷ
> ஹ்யேதத்துதமன்னம் ஸமம் நயதி தஸ்மாதேதா:
> ஸப்தார்ச்சிஷோ பவந்தி.

அபானன் கழிவுகளை வெளியேற்றுகிறது. கண், காது, வாய், மூக்கு ஆகிய புலன்களில் ப்ராணன் தானே வ்யாபிக்கின்றது. உடலின் நடுவில் ஸமானன் செயலாற்றுகிறது. இதுவே அர்ப்பிக்கப்பட்ட அன்னத்தை ஸமமாக கொண்டு செல்கிறது. அதனால் இது, ஏழு ஜ்வாலைகளுடன் கூடிய வேள்வித் தீயாக இருக்கிறது.

ப்ராணன் மேல் நோக்கி இயங்குவது. அபானன் கீழ் நோக்கி இயங்குவது. எனவே, புலன்களில் ப்ராணன் தானே நின்றும், கழிவுகளை வெளியேற்ற அபானனும் செயலாற்றுகின்றன. உடலின நடுவில் இயங்கும் வாயு ஸமானன். இது, உணவின் சக்தியை உடல் முழுமைக்கும் சுமந்து செல்கிறது. வெறுமனே சுமந்து செல்லாமல், உணவின் தன்மைக்கும், உடலின் தேவைக்கும் ஏற்ப, இது உணவினை பகிர்ந்தளிக்கிறது.

எவ்வாறு வேள்வித் தீயானது இடப்பட்ட ஆஹ{திகளை, அந்தந்த தேவர்களுக்கு கொண்டு செல்கிறதோ, அவ்வாறே ஸமானனும் உணவை உடலின் பல பகுதிகளுக்கும் வினியோகிக்கின்றது. எனவே, ஸமானன் வேள்வித் தீ போல் செயலாற்றுகின்றது.

ஹ்ருதி ஹ்யேஷ ஆத்மா அத்ரைதத் ஏகசதம் நாடீனாம் தாஸாம் சதம் சதமேகைகஸ்யாம் த்வாஸப்ததிர் த்வாஸப்ததி: ப்ரதிசாகா நாடீ ஸஹஸ்ராணி பவந்த்யாஸு வ்யானச்சரதி

ஆத்மா இதயத்தில் உள்ளது. இதயத்திலிருந்து 101 நாடிகள் செல்கின்றன. இவற்றில் 100 நாடிகளுக்கு நூற்றுக்கணக்கான கிளை நாடிகள். எழுபத்திரண்டு எழுபத்திரண்டாக ஆயிரமாக பரவியிருக்கும் இந்த நாடிகளில் உதானன் சஞ்சரிக்கிறது.

இந்த நாடிகள் பருப்பொருள் அல்ல. சூக்கும நிலையில் நம் உடலில் 72000 நாடிகள் இருப்பதாக தந்திர சாஸ்திரம் தெரிவிக்கிறது. இந்த நாடிகள் யாவும் இதயத்தைத் தாங்கி நிற்பவை.
இதயத்தைத் தாங்கி நிற்பவை 101 நாடிகள். இவற்றுள் 100 நாடிகள் தத்தம் கிளை நாடிகள் மூலம் உடலின் பல பகுதிகளையும் சென்றடைகின்றன. ஒரு நாடி மட்டும் உள்நாக்கின் வழியாக உச்சந்தலையை அடைகிறது. அதனைப் பற்றி அடுத்த ஸ்லோகம் சொல்கிறது.

அதைகயோர்த்வ உதான புண்யேன புண்யம் லோகம் நயதி
பாபேன பாபமுபாப்யாமேவ மனுஷ்ய லோகம்.

பிறகு ஒன்றான, மேல் நோக்கிச் செல்லும் நாடி வழியாக உதானன், புண்யம் செய்தவர்களை புண்ணிய லோகத்திற்கும் பாபம் செய்தவர்களை பாப லோகத்திற்கும் இரண்டும் செய்தவர்களை மனுஷ்ய லோகத்திற்கும் கொண்டு செல்கிறது.

‘பிறகு’ என்பதை ‘மரணத்திற்குப் பிறகு’ என்று எடுத்துக்கொள்ள வேண்டும். முந்தைய ஸ்லோகம், இதயத்தைத் தாங்கி நிற்கும் 101 நாடிகளில் 100 நாடிகளைப் பற்றிப் பேசியது. மீதமுள்ள ஒரு நாடி மேல் நோக்கிச் செல்வது. அந்த நாடி வழியாக, உதானன், புண்ணியம் செய்தவர்களைப் புண்ணிய உலகத்தில் சேர்க்கிறது.

பாபம் செய்தவர்களை பாப உலகங்களுக்கும், இரண்டும் கலந்து செய்தவர்களை மனிதர்கள் வாழும் இந்த உலகத்திற்கும் உதானனே அழைத்துச் செல்கிறது.

(புண்ணியம் மட்டும் செய்தவர்களோ, பாபம் மட்டும் செய்தவர்களோ இருக்க முடியாது. சாதாரண மனிதனின் செயல்களில் இரண்டும் கலந்தே இருக்கும். ஆத்ம ஞானிகள் மட்டுமே இந்த நாடி வழியாகப் ப்ராணனைப் பிரிப்பார்கள் என்று சொல்லப்படுகிறது.)

இதுவரை, ப்ராணன் நம் உடலில் இயங்குவதைப் பற்றிப் பார்த்தோம். இனி வரும் ஸ்லோகங்கள் புறப்பொருட்களில் - புறவுலகில் - ப்ராணனின் இயக்கத்தைப் பற்றிப் பேசுகின்றன.

ஆதித்யோ ஹ வை பாஹ்ய ப்ராண உதயத்யேஷ ஹ்யேனம்
சா கூஷு {ஷம் ப்ராணம் அனுக்ருஹ்ணான: ப்ருதிவ்யாம் யா
தேவதா ஸைஷா புருஷஸ்ய அபானம் அவஷ்டப்யாந்தரா
யதாகாச: ஸ ஸமானோ வாயுர்வ்யான:

சூரியனே நிச்சயமாக புறவுலகின் ப்ராணன். அருள்கூர்ந்து அவன் நம் கண்களுக்கு ஒளியூட்டுகிறான். பூமியாக நிற்கும் தேவ சக்தியே மனிதனில் உள்ள அபானனைக் கட்டுப்படுத்துகிறது. வெளி எனப்படும் ஆகாசம் ஸமானன். காற்றே வ்யானன்.

ப்ராணன் ஐந்தாகப் பிரிந்து பஞ்ச பூதங்களையும் சக்தி பெறச் செய்வதை முந்தைய ஸ்லோகம் ஒன்றில் பார்த்தோம். அகவுலகமான உடலில் மட்டுமல்லாது புறவுலகமான ப்ரபஞ்சத்திலும் பஞ்ச பூதங்களை இயக்குவது ப்ராணனே. புறவுலகில் பஞ்ச பூதங்களை இயக்கும் அந்தப் பராணன்களே நம் உடலிலும் பல்வேறு பணிகளைச் செய்கின்றன.

எனவே, தன் உடலில் செயல்படும் ப்ராணன்களைக் கட்டுப்படுத்தி இயக்க ஒருவன் தெரிந்து கொண்டால் ப்ரபஞ்சத்தின் அசைவுகள் யாவற்றையும் அவன் இயக்க முடியும்.

தேஜோ ஹ வை உதானஸ்தஸ்மாத் உபசாந்ததேஜா: புனர்பவம்

**இந்த்ரியைர் மனஸி ஸம்பத்யமானை:**

**நெருப்பே நிச்சயமாக உதானன். அதனால் நெருப்பு அனையப் பெற்றவன், தன் புலன்கள் மனதில் ஒடுங்க, மீண்டும் பிறக்கிறான்.**

**பஞ்ச பூதங்களில் உதானன் நெருப்பாக உள்ளது. அவ்வாறு நெருப்பு அல்லது சூடாக உடலில் உறையும் அந்த உதானன் நீங்கினால், மனிதன் தன் புலன்கள் யாவும் மனதில் ஒடுங்க. மனதின் எண்ணங்களுக்கேற்ப மீண்டும் இந்த உலகில் பிறக்கிறான்.**

**பிறப்பறுத்த ஞானிகள் உடல் சூடு குறையும் முன்பே தம் ப்ராணனை உடலிலிருந்து பிரித்து விடுவர். எனவே உடலில் உள்ள சூடு குறைந்து போய் ப்ராணனை விடுகிறவன் மீண்டும் பிறப்பெடுப்பவனாகிறான்.**

**யச்சித்தத்தேனைஷ ப்ராணமாயாதி ப்ராணஸ்தேஜஸா யுக்த:**
**ஸகாத்மனா யதா ஸங்கல்பிதம் லோகம் நயதி**

**இறுதிக் கணத்தில் சித்தத்தில் தங்கும் உணர்வோடு ப்ராணனை அடைகிறான். ப்ராணன், உதானனின் வழிகாட்டுதலோடு அவனை அவன் விரும்பிய உலகிற்கு சேர்க்கிறது.**

**இறுதிக் கணத்தில், மரண வேளையில், புலன்கள் யாவும் ஒடுங்கி சித்தம் மட்டுமே இருக்கும். (சித்தம் என்பது புத்தியோ மனமோ அல்ல. சித்தம், புத்தி, மனம், அஹங்காரம் என்று நான்கு இயக்கங்கள் உள்ளன. இவை அனைத்தையும் வழக்கத்தில் மனம் என்றே குறிப்பிடுகிறோம். ஆனால், அவை ஒவ்வொன்றின் உள்ளீடானத் தன்மைகள் வேறுபட்டவை. மனம் என்பது வாயுவின் அம்சம். நினைவும் மறதியும் இதன் தன்மைகள். புத்தி என்பது அக்னியின் அம்சம். நல்லதையும் கெட்டதையும் இது பகுத்துணரும். ஒரு பொருள் எப்படிப்பட்டது என்பதை நிச்சயிப்பது இதுவே. சித்தம் என்பது தண்ணீரின் தன்மை உடையது. சிந்தனையே இதன் செயல்பாடு. ஐம்புலன்களின் சலனத்திற்கும் இதுவே காரணம். அகங்காரம் என்பது நான்-உணர்வு. இது நிலத்தின் தன்மையைக் கொண்டது. திடத்தன்மைக் கொண்ட**

உடலையே நான் என்று கருதி செயல்புரிவது இது.) அந்த மனதின் எண்ணங்களும் ப்ராணனில் ஒடுங்கும். அவ்வாறு ஒடுங்கும் கணத்தில், பல்வேறு பிறவிகளிலும் அந்தப் ப்ராணனில் சேர்ந்துள்ள வினைப்பதிவுகள் யாவும் வெளிப்படும். (இங்கே 'கணம்' என்று குறிப்பிடப்படுவது 'ஒரு எண்ணத்திற்கும், அடுத்து வரும் எண்ணத்திற்கும் உள்ள இடைவெளி நேரம்'. இவ்வாறான மூன்று கணங்களுக்குள் அடுத்த பிறவி தீர்மானிக்கப்படும் என்று சான்றோர்கள் சொல்கிறார்கள்.) அந்தப் பதிவுகளின்படி அடுத்த பிறவிக்கான உடலைப் ப்ராணன் உருவாக்கும்.

ஆத்ம ஞானிகளுக்கு அவ்வாறானப் பதிவுகள் இல்லாததால் அவர்கள் மீண்டும் பிறப்பதில்லை.

ய: ஏவம் வித்வான் ப்ராணம் வேத ந ஹாஸ்ய ப்ரஜா
ஹீயதேSம்ருதோ பவதி ததேஷ ஸ்லோக:

அறிவாளியான எவன் ஒருவன் ப்ராணனை இவ்வாறு அறிகிறானோ அவனது பிறப்பு அழிவதில்லை. அழிவற்றவனாகிறான். இது பற்றி அடுத்த ஸ்லோகம் உள்ளது.

'அறிகிறான்' என்று இங்கே குறிப்பிடுவது வெறும் தகவலாக, நூலறிவாலோ, கேட்பதாலோ அறிவதல்ல. வார்த்தைகளைக் கடந்து வாழ்க்கையாக அத்தகையப் ப்ராண சக்தியை யாரொருவன் உணர்கிறானோ அவனை விட்டுப் ப்ராண சக்தி நீங்குவதில்லை. எனவே அவன் அழிவற்றவன் ஆகிறான்.

உத்பத்திமாயதிம் ஸ்தானம் விபுத்வம் பஞ்சதா அத்யாத்மம் சைவ ப்ராணஸ்ய விஜ்ஞாயாம்ருதமச்னுதே விஜ்ஞாயாம்ருதமச்னுத இதி.

ப்ராணனின் தோற்றம், வரவு, இருப்பு நிலை, வியாபித்தல், ஐந்தாகப் பிரிந்து செயலாற்றும் தன்மை இவற்றை உணர்ந்து யாரொருவன் ப்ராணனின் ஸ்தூல வெளிப்பாட்டை உணர்கிறானோ அவன் அழிவற்ற

நிலையை அடைகிறான். உணர்ந்தவன் அழிவற்ற நிலையை அடைகிறான்.

ப்ராண சக்தியை உணர்ந்த ஞானி, ப்ராண சக்தியிலேயே நிலைபெற்று அழிவற்ற நிலையை அடைகிறான்.

<u>இவ்வாறு ப்ரச்ன உபநிஷதத்தின் மூன்றாம் அத்தியாயம்</u>.

## <u>நான்காம் ப்ரச்ன</u>

> அத ஹைனம் ஸௌர்யாணீ கார்க்ய பப்ரச்ச பகவன் ஏதஸ்மின் புருஷே கானி ஸ்வபந்தி? கான்யஸ்மின் ஜாக்ரதி? கதா ஏஷ தேவ: ஸ்வப்ணான் பச்யதி? கஸ்யைதத் ஸுகம் பவதி? கஸ்மின் நு ஸர்வே ஸம்ப்ரதிஷ்ட்டிதா பவந்தீதி.

பிறகு, சூர்யனின் பெயரனான கார்க்கயன் கேட்டான், “ஆசிர்வதிக்கப்பட்டவரே, இந்த மனிதனில் எவை தூங்குகின்றன? எவை விழித்திருக்கின்றன? எந்த தேவன் கனவுகளைக் காண்கிறான்? இன்பம் யாருக்கு ஆகிறது? எல்லாம் எதில் நிலைபெறுகின்றன?

இந்தக் கேள்வியும் ஆழமானதே. மனிதன், விழிப்பு, தூக்கம், கனவு என்ற மூன்று நிலைகளில் மாறி மாறி சஞ்சரிக்கின்றான். இவன் எந்த நிலையிலிருந்தாலும், இவனுள்ளிருக்கும் எல்லா சக்திகளும் அதே நிலையில் இருப்பதில்லை. எனவே, எந்த சக்தி தூங்குகிறது? எது விழித்திருக்கிறது? எது கனவு காண்கிறது? என்ற கேள்விகள் எழுகின்றன. இந்த மூன்று நிலைகளிலும் இன்பத்தை அனுபவிப்பது யார்? வாழும்போது இவ்வாறிருக்கும் இந்த சக்திகள் யாவும் மரணத்திற்குப் பின் எதில் ஒடுங்குகின்றன? என்ற கேள்விகளும் தவிர்க்க முடியாதவையே.

இந்த கேள்விகள் யாவும் இதயத்திலிருந்து, தயையினால் - பரிவினால்- எழுவது. மேலோட்டமாகப் பார்த்தால், வெறும் நூலறிவு மட்டும் கொண்டு பார்த்தால் இவையும் கவலையைப் போல் தோன்றும். உள்ளார்ந்து பார்த்தால் இந்தக் கேள்விகளில் இருக்கும் பரிவு தெரியும்.

விழிப்பு, தூக்கம் போன்ற எந்த நிலையிலும் மனிதனால் தொடர்ந்து இருக்க முடியவில்லை. ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாறுவதே வாழ்க்கையாக அமைகிறது.

இந்த நிலையில், மனிதனை இயக்கும் சில சக்திகள் மட்டும் தொடர்ந்து விழித்துக்கொண்டே இருக்கின்றன. செந்நீர் நகர்வும், செல்களின் இயக்கமும், மூளைச் செயலும் ஜீரணிக்கும் செயலும் கழிவு அகற்றலும் எப்பொழுதும் நிற்காமல் நடக்கின்றன.
வினைப்பதிவுகள் ஆழ்மனதின் ஆழத்தில் தூங்கிக்கிடக்கின்றன.
விழிப்பு நிலைக்கும் கனவுக்கும் பல நேரங்களில் வித்தியாசம் தெரிவதில்லை. இரண்டிற்கும் உடல் ஒன்றாகவே பிரதிபலிக்கிறது.

எந்த சக்தி உறங்குகிறது? எது விழித்திருக்கிறது? எது கனவு காண்கிறது?

ஆழ்ந்த தூக்க நிலையிலோ, பிரபஞ்சமே மறைந்து போகிறது. ஆனால், விழித்தெழுந்தவுடன், 'நான் ஆனந்தமாகத் தூங்கினேன்' என்கிறோம். இந்த இன்பத்தை அனுபவிப்பது யார்? ஆழ்ந்த தூக்கத்தில் சக்தியூட்டப் படுவதால் புலன்களை இயக்கும் சக்திகளுக்கு இன்பமா? தூக்கம் ஓய்வைத் தருவதால் உடலுக்கு இன்பமா?
மரணத்தின் வாயில் வரை இவ்வாறு இயங்கும் இந்த சக்திகள் யாவும் மரணத்திற்குப்பின் என்னவாகின்றன? எங்கே ஒடுங்குகின்றன?

கேள்விகளின் ஆழம் புரிகிறதா? பரிவுக்கும் கவலைக்கும் உள்ள நூலளவு வேறுபாட்டை உணர்கிறீர்களா?
புரிந்து கொண்டவர்கள் பாக்கியசாலிகள்.
'அனாகதம்' உருவாக்கப்பட முடியாதது என்று தந்திர சாஸ்திரத்தில் பெயர் பெற்ற இதயச் சக்கரத்திலிருந்து எழுந்த இந்தக் கேள்விகளுக்கான பதிலைப்பார்ப்போம்.

> தஸ்மை ஸ ஹோவாச யதா கார்க்ய மரீசயோSர்க்கஸ்ய அஸ்தம் கச்சத:
> ஸர்வா ஏதஸ்மின் தேஜோமண்டல ஏகீபவந்தி தா: புன:
> புனருதயத ப்ரசரந்த்யேவம் ஹ வை தத் ஸர்வம் பரே தேவே

மனஸ்யேகீபவதி தேன தர்ஹ்யேஷ புருஷோ ந ச்ருணோதி ந பச்யதி ந ஜிக்சதி ந ரஸயதே ந ஸ்ப்ருஸதே நாபிவததே நானந்தயதே ந விஸ்ருஜதே நேயாயதே ஸவபிதீத்யாசக்ஷதே

கார்க்யரிடம் பிப்பலாத முனிவர் கூறினார், "கார்க்கியா, எவ்வாறு சூரியன் மறையும்போது எல்லா கிரணங்களும் அதன் ஒளித்திரளில் ஒடுங்குகின்றனவோ, உதிக்கும்போது மீண்டும் வெளியே பரவுகின்றனவோ அவ்வாறே புலன்கள் யாவும் தலைமைப் புலனான மனதில் ஒடுங்குகின்றன. அப்பொழுது அவன் பார்ப்பதில்லை, கேட்பதில்லை, முகர்வதில்லை, சுவைப்பதில்லை, உணர்வதில்லை, பேசுவதில்லை, ஏற்பதில்லை, மகிழ்வதில்லை, வெளிவிடுவதில்லை, நகர்வதில்லை. அவன் தூங்குகிறான் என்று சொல்கிறார்கள்"

மனம் இருப்பதாலேயே, எண்ணங்கள் எழுவதாலேயே புலன்கள் தத்தம் வேலைகளைச் செய்கின்றன. எனவே மனம், தலைமைப் புலன் எனப்பட்டது. தூக்கத்தில் எல்லாப் புலன்களும் மனதில் ஒடுங்குகின்றன. புலன்களில் செயல்பாடுகள் அற்ற அந்த நிலை தூக்கம் எனப்படுகிறது.

ப்ரணாக்னய ஏவைதஸ்மின் புரே ஜாக்ரதி கார்ஹபத்யோ ஹ வா ஏஷோSபானோ வ்யானோ Sன்வாஹார்யபசனோ யத்கார்ஹபத்யாத் ப்ரணீயதே ப்ரணயனாத் ஆஹவணீய: ப்ராண:

ப்ராண அக்னிகள் மட்டுமே இந்த உடலாகிய நகரத்தில் விழித்திருக்கின்றன. அபானன் கார்ஹபத்யம், எது கார்ஹபத்யத்திலிருந்து எடுக்கப்படுவதோ, எடுக்கப்படுவதால் வ்யானன் அன்வாஹார்யபசனம், ப்ராணன் ஆஹவணீயம்.

முந்தைய ஸ்லோகம் தூங்குவனவற்றைப் பற்றிப் பேசியது. இங்கு தூக்கத்தின்போது விழித்திருப்பவைப் பற்றி விளக்கப்படுகிறது. உடலாகிய நகரத்தில் ப்ராணன்கள் எனப்படுபவை விழித்திருக்கின்றன. ப்ராணன் தன்னை ஐந்தாகப் பிரித்துக்கொண்டு செயலாற்றுகிறது என்று முந்தைய அத்தியாயங்களில் பார்த்தோம். அந்த ஐந்து ப்ராணன்களும்

**நகரத்தில் அல்லது ஒவ்வொரு வீட்டிலும் எரிந்துக்கொண்டிருக்க வேண்டிய வேள்வி அக்னிக்கு ஒப்பிடப்படுகிறது.**

**உள்மூச்சில் ப்ராணனும் அபானனும் கலந்தே இருக்கும். உடலுக்குள் வந்தவுடன் அபானனிடமிருந்து ப்ராண வாயு பிரிக்கப்பட்டு உடலின் பல பகுதிகளுக்கும் அனுப்பப்படும். பிரித்து எடுக்கப்படுவதால் ப்ராண வாயு ஆஹவணீய அக்னியாக குறிப்பிடப்படுகிறது.**

**அபானன் உடலில் எப்போதும் இருந்தே ஆகவேண்டும் என்பது நுட்பமாக உணரத்தக்கது. ப்ராணன் மிகுந்து அபானன் குறைந்துவிட்டால் உடல் எடை குறைந்து காற்றில் மிதக்கத் துவங்கிவிடும்.**

*வேள்விகளைப் பற்றி சிறிது பார்ப்போம்.*

*சுமார் 400 வேள்விகள் பற்றி வேதங்கள் விவரிக்கின்றன. வேள்விகள் செய்வதற்கு அந்தனர், க்ஷத்ரியர், வைசியர் என்ற மூன்று குலத்தவர்களுக்கும் அதிகாரம் வேத காலத்தில் இருந்தது. பிற்காலத்தில் வைசியர் வேள்விகள் செய்வது குறைந்து போய் வழக்கொழிந்தது. பின்னர், அரச குலத்தோர் தினசரி வேள்விகளைக் குறைத்து, போரின் வெற்றிக்கும், மழை, இயற்கை சீற்றங்கள் போன்றவற்றிற்குமாக செய்யப்படும் 'காம்ய' வேள்விகள் மட்டுமே செய்தனர். இவ்வாறு வேள்விகள் இயற்றுவது அந்தனர்களிடம் மட்டுமே நிலைபெற்றது.*

*அந்தனர்கள் செய்ய வேண்டிய வேள்விகள் 21 உண்டு. அவை மூன்று பிரிவுகளில் அடங்கும். முதல் பிரிவில் வரும் 7 வேள்விகள் 'பாக வேள்விகள்' எனப்படும். இவை பெரும்பாலும் அவருக்கும் அவரது குடும்பத்திற்குமானவை. இரண்டாவது பிரிவு 'ச்ரௌத வேள்விகள்'. இவை வேதத்தில் நேரடியாகக் கூறப்பட்டிருப்பவை.*

*இந்த ச்ரௌத ஹோமங்களைச் செய்வதற்கு மூன்று வகையாக யாக அக்னிகள் தேவை. இதனால் இவற்றை 'முத்தீ', 'முத்தீ ஓம்புதல்' என்று பழைய தமிழ் நூல்கள் குறிப்பிடுகின்றன.*

*தேவைப்படும் மூன்று அக்னிகளில் முக்கியமானது 'கார்ஹபத்யம்' இது வட்ட வடிவமான யாக குண்டத்தில், யஜமானனுக்குப் பின்புறம் எரிந்து கொண்டிருக்கும். இதில் எந்த ஹோமமும் செய்யக்கூடாது. இதிலிருந்து அக்னியை எடுத்து வேறு குண்டத்தில் வைத்தே மற்ற ஹோமங்கள்*

*செய்யப்படவேண்டும். இந்த அக்னி அனையாமல் எரிந்து கொண்டிருக்க வேண்டும்.*

*இந்த அக்னி குண்டத்திலிருந்து அக்னி எடுத்து, யஜமானனின் வலப்புறம், அதாவது தென்திசையில் அரை வட்ட வடிவில் இருக்கும் குண்டத்தில் இடுவது தக்ஷினாக்னி அல்லது அன்வார்யபசனம். இது சில்லறை தேவதைகளுக்கும் பித்ரு தேவதைகளுக்கும் யாகங்கள் செய்வதற்கு உரியது.*

*மற்ற தெய்வங்களுக்குச் செய்யப்படும் யாகங்களுக்காக அமைக்கப்படும் குண்டம் 'ஆஹவணீயம்'. இது சதுர வடிவினதாக இருக்கும். இது யஜமானனுக்கு முன்புறம் அமைக்கப்படும். இதற்கும் அக்னியை 'கார்ஹபத்யம்' அக்னியிலிருந்தே எடுக்க வேண்டும்.*

*வீட்டிற்கு வெளியே யாக சாலைகளில் செய்யப்படும் யாகங்களுக்கான அக்னி, இந்த 'ஆஹவணீய'த்திலிருந்து எடுக்கப்படும்.*

**யதுச்ச்வாஸ நி:ச்வாஸௌ ஏதாவாஹு{தி ஸமம் நயதீதி ஸ ஸமான: மனோ ஹ வாவ யஜமான இஷ்ட்ட ஃபலமேவ உதான: ஸ ஏனம் யஜமானம் அஹரஹர் ப்ரஹ்ம கமயதி.**

**உள்மூச்சு, வெளிமூச்சு எனும் இரண்டு ஆஹு{திகளையும் சமமாக நடத்திச்செல்வது ஸமானன். மனமே யஜமானன். யாக பலன் நிச்சயமாக உதானன். அது யஜமானனை தினம் தினம் இறைநிலைக்கு இட்டுச்செல்கிறது.**

**உள்மூச்சும் வெளிமூச்சும் உயிர் வாழ்க்கைக்கு ஆதாரமானவை. ஆஹு{திகளே யாகத்திற்கு ஆதாரம். எனவே, அவை இரண்டும் ஆஹு{திகள எனப்பட்டது. அவற்றை நடத்திச் செல்வது ஸமானன் என்ற சக்தி. இது யாகத்தின் ஆஹு{திகளைப் பிரித்து, வகைப்படுத்துபவரான 'ஹோத்ரு'வைப் போன்றது.**

**மனமே உயிர் வாழ்க்கைக்குக் காரணம் என்பதால் அதுவே யஜமானன்.**

**இந்த அக்னிஹோத்ர வேள்விகளின் பலன் ஆத்ம தரிசனம் ஒன்றே. ஆழ்ந்த தூக்கத்தில் மனம் பிரபஞ்ச அறிவோடு, பிரம்மத்தோடு தொடர்பு கொள்கிறது. அதற்கு உதவுவது உதானன். பிரம்மத்தோடு**

தொடர்பு கொள்ள உதவுவதால், உதானன் வேள்வியின் பலன் எனப்பட்டது.

இனி கனவு நிலை பற்றிய கேள்விக்கு வருவோம்.

> அத்ரைஷ தேவ: ஸ்வப்னே மகிமானமனுபவதி யத் த்ருஷ்ட்டம்
> த்ருஷ்ட்டமனுபச்யதி: ச்ருதம் ச்ருதமேவார்த்தம் அனுச்ருணோதி
> தேச திகந்தரைச்ச ப்ரத்யனுபூதம் புன: புன: ப்ரத்யனுபவதி
> த்ருஷ்ட்டம் சாதிருஷ்ட்டம் ச ச்ருதம்சாச்ருதம் சானுபூதம்
> சானனுபூதம் ச
> ஸச்சாஸச்ச ஸர்வம் பச்யதி ஸர்வ: பச்யதி

இங்கே இந்த தேவன், கனவு நிலையில், மகிமையை அனுபவிக்கிறான். பார்த்ததை மீண்டும் பார்க்கிறான். கேட்டதை மீண்டும் கேட்கிறான். பல்வேறு இடங்களிலும் அனுபவித்தவற்றை மீண்டும் அனுபவிக்கிறான். பார்த்தவை, பார்க்காதவை, கேட்டவை, கேட்காதவை, அனுபவித்தவை, அனுபவிக்காதவை, உன்மையானவை, உ;னமையற்றவை என்று எல்லாம் தானே ஆகி தானே அனுபவிக்கிறான்.

கனவு நிலையில், மனிதனில் உள்ள ப்ராணன், மனத்தின் பதிவுகளை எழுப்பி, மீண்டும் அனுபவிக்கிறது. அந்தப் ப்ராணனே இங்கு தேவனாகக் குறிப்பிடப்படுகிறது.
பார்த்த, கேட்ட, அனுபவித்த ஒரு விஷயம், வினைப்பதிவாக மாறவேண்டும் என்றால் அது ஆழமாகப் பதிய வேண்டும். மீண்டும் மீண்டும் எழுப்பப்படும் எண்ணங்களே ஆழமாகப் பதியும். எனவே, கனவு நிலையில் ப்ராணன் மீண்டும் அனுபவிப்பவை யாவும் பதிவுகளாக மாறும் வாய்ப்பு உண்டு.
முன்பே ப்ராணன் பெற்றிருக்கக்கூடிய பதிவுகளும் இந்தக் கனவு நிலையில் எழலாம். எனவேதான், கண்டவற்றையும், காணாததையும் என்றெல்லாம் ஸ்லோகம் குறிப்பிடுகிறது. பழைய பதிவுகள், இப்பொழுது காணாததாயினும், கனவுகளில் வெளிப்படும்போது அவை மேலும் ஆழமான பதிவுகளாக மாறுகின்றன.

கனவுகளைக் கடந்த ஆழ்ந்த தூக்க நிலையைப் பார்ப்போம்.

ஸ யதா தேஜஸா அபிபூத: பவதி அத்ரைஷ தேவ: ஸ்வப்னான் ந பச்யத்யத ததைதஸ்மின் சரிரே ஏதத்ஸுகம் பவதி

எப்பொழுது அந்த தேவன், ஒளியால் ஆக்ரமிக்கப்பட்டு கனவுகளைக் காண்பதில்லையோ, அப்பொழுது இந்த உடலில் அந்த இன்பம் உண்டாகிறது

முந்தைய ஸ்லோகத்தில, ப்ராணனாகிய தேவன், கனவுகளைக் காண்பதைப் பார்த்தோம். அந்த தேவன், ஆத்மா எனும் ஒளியற்ற ஒளியால் ஆக்ரமிக்கப்படும்போது, கனவுகளைக் காண்பதில்லை.

கனவின்பம் இல்லாத அந்த நேரத்தில், ஆத்மாவின் சம்பந்தத்தால் இறைநிலையின் கலப்பு ஏற்பட்டு ஆனந்த நிலை வாய்க்கிறது. இந்த ஆனந்த நிலை என்பது 'ஸுகம்' 'பேரின்பம்' என்றெல்லாம் சொல்லப்பட்டாலும், இது சந்தோஷம், துக்கம் இரண்டுமற்ற சமநிலை என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். சுகத்திலிருந்து துக்கத்திற்கும், மீண்டும் சுகத்திற்குமாக ஆடிக்கொண்டிருக்கும் மனதிற்கு இந்த சமநிலை இன்பமாகவே இருக்கும்.

ஸ யதா ஸோம்ய வயாம்ஸி வாஸோவ்ருக்ஷம் ஸம்ப்ரதிஷ்ட்டந்தே ஏவம் ஹ வை தத்ஸர்வம் பர ஆத்மனி ஸம்ப்;ரதிஷ்ட்டதே

இனியவனே, எவ்வாறு பறவைகள் தான் வாழும் மரத்தை நாடித் திரும்புகின்றனவோ, அது போல் இவை யாவும் மேலான ஆத்மாவில் ஒடுங்குகின்றன.

பறவைகள் மாலை நேரத்தில் தாம் வாழ்கின்ற மரத்தை நாடித் திரும்பும்.

இந்த உபமானம்தான் எத்தனைப் பொருத்தம்?. மரம் அவற்றின் வீடு. மரம் அவற்றிற்கு ஓய்வைக் கொடுக்கும். அதே போல், ப்ராணன் முதலான யாவற்றிற்கும் ஆத்மாவே வீடு. ஆத்மாவிற்கு பதிவுகள் இல்லையாததால், பதிவுகளுள்ள ப்ராணன் அதில் ஓய்வெடுக்கிறது.

பறவைகள், ஓய்வு முடிந்து வெளியே கிளம்புவதுபோல், ஆத்மாவிலிருந்து யாவும் வெளியே வருகின்றன.

எவையெல்லாம் ஒடுங்குகின்றன என்பதை அடுத்து வரும் ஸ்லோகங்கள் பட்டியலிடுகின்றன.

ப்ருதிவீச ப்ருதிவீமாத்ரா சாபச்சாபோமாத்ரா ச தேஜச்ச தேஜோமாத்ரா ச வாயுச்ச வாயுமாத்ரா ச ஆகாசச்சாகாசச்சமாத்ரா ச சக்ஷுச்ச த்ரஷ்ட்டவ்யம் ச ச்ரோத்ரம் ச ச்ரோதவ்யம் ச க்ராணம் ச கராணவ்யம் ச ரஸச்ச ரஸயிதவ்யம் ச த்வக்ச ஸ்பர்சயித்வம் ச வாக்ச வக்தவ்யம் ச ஹஸ்தௌ சாதாதவ்யம் சோபஸ்தச்ச ஆனந்தயிதவ்யம் ச பாயுச்ச விஸர்ஜயிதவ்யம் ச பாதௌ ச கந்தவ்யம் ச மனச்ச மந்தவ்யம் ச புத்திச்ச போத்தவ்யம் சாஹங்காரச்ச அஹம்கர்த்தவ்யம் ச சித்தம் ச சேதயிதவ்யம் ச தேஜச்ச வித்யோதயிதவ்யம் ச ப்ராணச்ச விதாரயிதவ்யம் ச.

நிலம், நிலத்தின் நுண்பகுதி, நீர், நீரின் நுண்பகுதி, நெருப்பு, நெருப்பின் நுண்பகுதி, காற்று, காற்றின் நுண்பகுதி, ஆகாயம் அல்லது வெளி, வெளியின் நுண்பகுதி, கண், அதன் பார்வை, காது, கேட்கும் தன்மை, நாசி, முகர்தல், சுவை, சுவைக்கப்படுவது, தோல், தொடு உணர்வு, பேச்சு, பேசப்படுவது, கைகள், எடுக்கப்படுவது, குதம், வெளியேற்றப்படுவது, கால்கள், நடப்பது, மனம், எண்ணங்கள், அறிவு, அறியப்படுவது, அகங்காரம், நான் என்ற உணர்வு, நினைவு, நினைக்கப்படுவது, ஒளி, ஒளியால் அறியப்படுவது, ப்ராணன், ஒருங்கினைப்பது என்ற எல்லாம்.

பஞ்ச பூதங்கள், புலன்கள், மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் இவையும், இவற்றின் நுண்பகுதிகளும் யாவும் ஆத்மாவில் ஒடுங்குகின்றன.

ஏஷ ஹி த்ரஷ்ட்டா ஸ்ப்ரஷ்ட்டா ச்ரோதா க்ராதா ரஸயிதா மந்தா போத்தா கர்த்தா விஜ்ஞானாத்மா புருஷ: ஸ பரேSக்ஷரே ஆத்மனீ ஸம்ப்ரதிஷ்ட்டதே.

அதுவே நிச்சயமாக பார்ப்பது, கேட்பது, உணர்வது, முகர்வது, சுவைப்பது, நினைப்பது, அறிவது, செய்வது, மனிதன் என்று அறியப்படுவது. அது மேலான அழிவற்ற ஆத்மாவில் நிலைபெற்றுள்ளது.

அறிவன யாவும் ப்ராணனின் துனைக்கொண்டே நிகழ்கின்றன. அவ்வாறானப் ப்ராணன் அழிவற்ற, மேலான ஆத்மாவில் நிலைபெறுகிறது.

'ஆத்மாவில் ஒடுங்குகின்றன' என்பதால் அந்த ஆத்மாவைப் பற்றிய, ஆத்ம அனுபூதி பற்றியவை அடு;த்து வரும் ஸ்லோகங்கள்.

பரமேவாக்ஷரம் ப்ரதிபத்யதே ஸ யோ ஹ வை ததச்சாயம் அசரீரம் அலோஹிதம் சுப்ரமக்ஷரம் வேதயிதே. யஸ்து ஸோம்ய ஸ ஸர்வஜ்ஞ: ஸர்வோ பவதி ததேஷ ஸ்லோக:

யார் ஒருவன், நிழலற்ற, உடலற்ற, நிறமற்ற, தூய்மையான, அழிவற்றதான அதனை உணர்கிறானோ அவனே மேலான, அழிவற்ற அதனை அடைகிறான். இனியவனே, அவன் அனைத்தையும் அறிந்தவனாகிறான். அவன் அனைத்தும் ஆகிறான். இதுபற்றி மேலும் ஸ்லோகம் உள்ளது.

ஆத்மா, அதுவே ஒளியற்ற ஒளியானதால் 'நிழலற்றது'. ஒளிப்பொருள் என்பதால் 'உடலற்றது', ஒளியற்ற ஒளி என்பதால் 'நிறங்களற்றது'.
தூய்மையான அதனை உணர்வது என்பதும் அடைவது என்பது ஒன்றே. ஆத்மா எங்கும் வியாபித்திருப்பது. எங்கும் வியாபித்திருந்தாலும், அதன் இருப்பை உணராதவரை, அது இருந்தும் இல்லாததாகிறது. இருப்பை உணர்ந்தாலோ அவன் ஆத்மாவாகவே மாறிவிடுகிறான். சுகத்திலும் துக்கத்திலும் அடிப்பட்டு ஆடிக்கொண்டிருக்கும் நான்-உணர்வு, ஆத்மாவை உணர்வதால் அனுபவிக்கும் சமத்தன்மையால் தன்வசமிழந்து பரவசப்படுகிறது. அது ஆத்மாவில் ஒடுங்கி, சமத்தன்மை என்ற அந்த பேரின்ப நிலையிலேயே திளைக்கிறது.

அவ்வாறு ஆத்மாவை உணர்ந்து, ஆத்மாவை அடைந்தவன். – அந்த ஆத்மாவே யாவற்றிலும் உள்ளது என்பதால் - எல்லாம் அறிந்தவன் ஆகிறான். அவன் ஆத்மாவில் ஒன்றுவதால், யாவற்றிலும் வியாபிக்கிறான்.

விஜ்ஞானமாத்மாஸஹ தேவைச்ச ஸர்வை:
ப்ராணா பூதானி ஸம்ப்ரதிஷ்ட்டந்தி யத்ர
ததக்ஷரம் வேதயதே யஸ்து ஸோம்ய
ஸ ஸர்வஜ்ஞ: ஸர்வவேவ ஆவிவேசேதி

நான்-உணர்வு என்ற அஹங்காரத்தோடு அனைத்து புலன் சக்திகள், பிராணன்கள், பஞ்ச பூதங்கள் யாவும் எங்கு நிலைபெறுகின்றனவோ, அழிவற்றதான அது உணரப்படவேண்டும். இனியவனே, அவ்வாறு உணர்ந்தவன், அனைத்தும் அறிந்தவன், அனைத்திலும் வியாபிக்கிறான்.

<u>இவ்வாறாக, ப்ரச்ன உபநிஷதத்தின் நான்காவது அத்தியாயம்.</u>

## ஐந்தாவது ப்ரச்ன

அத ஹைனம் சைப்ய: சத்யகாம: பப்ரச்ச ஸ யோ ஹ வை தத்பகவன்
மனுஷ்யேஷு ப்ராயணாந்தம் ஓங்காரமபித்யாயீத கதமம் வாவ ஸ தேன லோகம் ஜயதீதி.

பிறகு, அவரிடம் சிபியின் மகனான சத்யகாமன் கேட்டான், “ஆசிர்வதிக்கப்பட்டவரே, மனிதர்களில் யாரொருவன் தன் வாழ்நாள் முழுவதும் ஓங்காரத்தை தியானிக்கிறானோ, அவன் எந்த நிலையை அடைகிறான்?

ஓங்காரத்தை தியானிப்பவனுக்கு அடையப்போகும் நிலை பற்றி கேள்வி எழ வாய்ப்பில்லை. தியானிக்காதவனுக்கு அந்த நிலை பற்றிய கேள்வி தேவையில்லை.

ஆத்மஞானியின் அருகாமையில் ஓராண்டு காலம் தவத்தில் கழித்த பின் இந்த கேள்வி எழுந்திருக்கிறது என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.
இது 'விசுத்தி' எனும் சக்தி மையத்திலிருந்து எழுகின்ற கேள்வியாகும். இந்த சக்தி மையம், ப்ரபஞ்ச சக்தியைத் தேக்கி வைக்கும இடம் - சக்தி சாகரம். இந்த கேள்வி நேரானது. ஆனால், தன் தனித்தன்மையை உணர்த்துவதாகவும், ஒரு உள்ளார்ந்த ஒப்பீடும் இந்தக் கேள்வியில் இருக்கிறது. ஒப்பீடு வாழ்க்கைக்கு உப்பிடாது.

தஸ்மை ஸ ஹோவாச
ஏதத் வை ஸத்யகாம பரம் சாபரம் ச ப்ரஹ்ம யதோங்கார:
தஸ்மாத் வித்வான் ஏதேனைவ ஆயதனேன ஏகதரம் அன்வேதி.

பிப்பலாத முனிவர் சத்யகாமனிடம் கூறினார், "ஸத்யகாமா, ஓங்காரமானது மேலான மற்றும் சாதாரண நிலை என்று இரண்டு நிலைகளில் அறியத்தக்கது. அதனால், அதனை த்யானிப்பவன் - தன் தியானத்திற்கு ஏற்ப - இரண்டில் ஒரு நிலையை அடைகிறான்.

ஓங்காரத்தை சாதாரண நிலையில் த்யானிப்பது பற்றி தைத்திரீய உபநிஷதம் விரிவாகப் பேசுகிறது. சாதாரண நிலையில் ஓங்காரம் ஜபிக்கப்படுகிறது. இதுவும் தாழ்ந்தது அல்ல. உயர்வழிக்கு இட்டுச் செல்லும் படிக்கல். முறையாக ஓங்காரத்தை ஜபிப்பவன், இறை அருளால் மெல்ல மெல்ல ஓங்காரத்தின் உயர் நிலை த்யானத்திற்கு நகர்கிறான்.

இந்த உபநிஷதம் ஓங்காரத் த்யானத்தின் உயர் நிலையை மட்டுமே விவரிக்கின்றது. கேள்விக்கு விடையளிப்பதை விட்டு கேட்டவருக்கான விளக்கம் அளிக்கப்படுகிறது.

ஸ யத்யேகமாத்ரம் அபித்யாயீத ஸ தேனைவ
ஸம்வேதிதஸ்தூர்ணமேவ ஜகத்யாமபி ஸம்பத்யதே தம் ரிசோ
மனுஷ்யலோகமுபநயந்தே ஸ தத்ர தபஸா ப்ரஹ்மச்சர்யேன
ச்ரத்தயா ஸம்பன்னோ மஹிமானமனுபவதி

**யாரொருவன் ஓங்காரத்தின் ஒரு மாத்திரையை மட்டும் த்யானிக்கிறானோ அவன் அதனாலேயே உள்ளொளி பெற்று துரிதமாக மனித உலகிற்கு திரும்பி வருகிறான். அவனை ரிக் வேத தேவதைகள் மனித உலகிற்கு அழைத்து வருகின்றன. அவன் இங்கு தவம், பிரஹ்மசர்யம், ச்ரத்தை முதலியவற்றைக் கைக்கொண்டு வாழ்க்கையை மகிமையுடன் அனுபவிக்கிறான்.**

**ஓங்காரத்தின் ஒரு மாத்திரை என்பது முதல் மாத்திரையான, ஒலியான 'அ' என்பதைக் குறிக்கும். இது விழிப்பு நிலையைக் உணர்த்துவது என்று மாண்டூக்ய உபநிஷதம் குறிப்பிடுகிறது.**

**அந்த விழிப்பு நிலையை த்யானிக்கிறவன், மரணமடைந்த பின் மனித உலகிற்கே திரும்பி வந்து, மேலான, இறை நாட்டமுள்ள வாழ்க்கையை வாழ்கிறான்.**

**மனித உலகிற்கு மீண்டும் வருவதும், இறை நாட்டமுள்ள ஒரு வாழ்க்கையை வாழ்வதும் சாதாரணமானதல்ல.**

**"மனித பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே" என்கிறது தேவாரம்**

**"மீனாய், மானாய், வேங்கடத்தான் சந்நிதி தூனாய் ஏதாகிலும் ஒரு பிறப்பு வேண்டும்" என்று கேட்கிறார் திருமங்கையாழ்வார்.**

**"எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் ஆட்செய்வோம்" என்கிறார் கோதை நாச்சியார்.**

*ஓங்காரம் - ஒரு பார்வை.*

*அநாஹத த்வனி. - அதாவது உருவாக்கப்பட முடியாத ஒலி. இது, ப்ரபஞ்சம் பிரம்மத்தில் ஒடுங்கிய நிலையில் இருக்கும் பொழுதும் இருந்தது. பிரம்மம் தன்னைத் தானே பலவாக மாற்றிக்கொள்வதற்கு உதவியதும் இதுவே.*

*அநாஹத த்வனி உருவாக்கப்பட முடியாத ஒலியாக இருப்பதால் அதற்கு இனையான ஓம் எனும் ஒலிக்குறிப்பு பயன்படுத்தப்பட்டது. இந்த ஓம், 'அ' 'உ' 'ம்' என்ற மூன்று ஒலிகளின் தொகுப்பாகும். எழுத்துக்களை உச்சரிக்கும் கால அளவை 'மாத்திரை' என்று குறிப்பிடுவர். ஓம் என்பது மூன்று மாத்திரை அளவிற்கு ஒலிக்கப்படவேண்டும். அநாஹத த்வனியை ஒத்திருப்பதால் இதனை நீட்டியும் உச்சரிக்கலாம்.*

*இந்த மூன்று எழுத்துக்களும் விழிப்பு, கனவு, தூக்கம் என்ற மூன்று நிலைகளாக (முறையே) உள்ளன.*

*இந்த மூன்று ஒலிகளையும் பற்றி மாண்டூக்ய உபநிஷதம் விரிவாகப் பேசுகின்றது. ப்ரபஞ்சம் தோன்றும் பொழுது, இந்த ஓங்காரத்துடன் வேறு பல ஒலிகளும் எழுந்தன. அவற்றிற்கு 'வ்யாஹ்ருதிகள்' என்று பெயர்.*

*இந்த அநாஹத த்வனி மிகுந்திருப்பதால்தான் நீர்நிலைகள், மலைகள், காடுகள் போன்றவை தவத்திற்கும் மந்திர ஜபத்திற்கும் ஏற்றவையாகின்றன. இந்த ஒலி, மந்திரங்களின வலிமையை அதிகப்படுத்துகிறது.*

*இந்த அநாஹத த்வனியிலிருந்தே 'காயத்ரி மந்திரம் எழுந்தது என்று கூறப்படுகிறது. ப்ரபஞ்சம் ப்ரம்மத்தில் ஒடுங்கியிருந்த நிலையில் எவ்வாறான அமைதி இருந்திருக்குமோ அத்தகைய அமைதி நிலைக்கு நம்மை எடுத்துச் செல்ல வல்லது இது. எனவே, எல்லா மந்திரங்களுக்கும் மூலமாவது இந்த அநாஹத த்வனியே.*

*வேதங்கள் யாவும் தோன்றியதும் இதிலிருந்தே. எனவே, அநாஹத த்வனி அல்லது ஓங்காரம் ஒப்பிடயியலாத உயர்வுடையது. அநாஹத த்வனி, இதயச் சக்கரமான 'அநாஹதச் சக்கரத்தில்' சக்தியை நிரப்பும். ஓங்காரம் மூலாதார சக்கரத்தினை சீரமைக்கும். இதனையே ஔவை பிராட்டியார் தனது விநாயகர் அகவலில்*

*குண்டலி யதனிற் கூடிய அசபை*
*விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து என்றும்;*
*இடைபிங் கலையின் எழுத்தறி வித்து என்றும குறிப்பிடுகிறார்.*

**அத யதி த்வி மாத்ரேண மனஸி ஸம்பத்யதே ஸோSந்தரிக்ஷம் யஜுர்பிருன்னீயதே ஸோமலோகம். ஸ ஸோமலோகே விபூதிமனுபூய புனராவர்த்ததே.**

**பிறகு, இரண்டு மாத்திரைகளால் மனதில் வளம் பெறுகின்றான். அவனை யஜுர்வேத தேவதைகள் இடைவெளியிலுள்ள சந்திர லோகத்திற்கு அழைத்துச் செல்கின்றன. அவன் சந்திர லோகத்தின் இன்பங்களை அனுபவித்துப் பின் மீண்டும் பிறக்கிறான்.**

**'இரண்டு மாத்திரைகள்' என்பது 'அ' மற்றும் 'உ'. இந்த இரண்டும் விழிப்பு மற்றும் கனவு நிலைகளைக் குறிப்பதாகும். யாரொருவன் விழிப்பு நிலையில் மட்டுமல்லாது கனவு நிலையிலும் இந்த ஒலிகளை ஆழ்ந்து த்யானிக்கிறானோ அவன் மனதின் வளங்களை அடைகிறான் என்கிறது ஸ்லோகம்.**

**விழிப்பு நிலையில் ஒரு மந்திரத்தையோ உருவத்தையோ த்யானிப்பது எளிதானதாகும். கனவு நிலையிலும் த்யானிக்க வேண்டும் என்றால் அந்த மந்திர த்யானமே மனதில் முழுமையாக வ்யாபித்திருக்க வேண்டும். "நனவில் பெற்ற அனுபவங்களையே**

மீண்டும் மீண்டும் கனவு நிலையில் அனுபவிக்கிறான்" என்று முந்தைய அத்தியாயத்தில் பார்த்தோம். அவ்வாறு, மனதில் இந்த ஒலிகளே முழுமையாக நிறைந்திருக்கப் பெற்று, கனவு நிலையிலும் இவற்றை த்யானிப்பவன், மனதளவில் நிறைவை அடைகிறான். மனதில் நிறைவை அடைந்தவன் இந்த உலகில் பற்றற்ற வாழ்வை வாழ்கிறான்.

மரணத்திற்குப் பின், பூமியிலும் ப்ரம்ம லோகத்திலும் இல்லாமல் இடையிலுள்ள சந்திர லோகத்தில் இன்பங்களை அனுபவிக்கிறான். சந்திர லோகம் என்பது மனதின் பாவனையைக் குறிக்கிறது. விழிப்பு நிலையில் இருப்பவன் உடல் ரீதியாக மட்டுமே – புறவுலகில் மட்டுமே செயல்பட முடியும். ஆனால் கனவு நிலையில புறவுலகில் மட்டுமல்லாது அகமுகமாகவும் செயலாற்ற முடியும். எனவே, கனவு நிலையிலும் த்யானிப்பவன், மனதின் பாவனைகளாக, வினைப் பதிவுகளால் அவன் அனுபவிக்க வேண்டியவற்றையும் அனுபவிக்கிறான்.

அவ்வாறான அனுபவத்திற்குப் பின் அவன் மீண்டும் பிறக்கிறான்.

> ய: புனரேதம் த்ரிமாத்ரேண ஓமித்யேதேனைவ அக்ஷரேண பரம் புருஷம் அபித்யாயீத ஸ தேஜஸி ஸ_ர்யே ஸம்பன்ன: பாதோதரஸ்த்வசா விநிர்முச்யத ஏவம் ஹ வை ஸ பாப்மனா விநிர்முக்த: ஸ ஸாமபிருன்னீயதே ப்ரஹ்மலோகம் ஸ ஏதஸ்மாத் ஜீவகனாத் பராத்பரம் புரிசயம் புருஷமீக்ஷதே ததேதௌ ச்லோகேன பவதி.

யாரொருவன் மூன்று மாத்திரைகளையும் ஓம் என்று அழிவற்றதான பரம்பொருளை த்யானிக்கிறானோ அவன் உள்ளொளி பெற்று, சூரியனை அடைகிறான். எவ்வாறு பாம்பு தன் தோலிலிருந்து விடுபடுகிறதோ, அது போல் பாவங்களிலிருந்து விடுபடுகிறான். அவன் ஸாம வேத தேவதைகளால் ப்ரம்ம லோகத்தை அடைகிறான். அங்கிருந்து, உயிர்த் தொகுதிகளுக்கும், மேலானதற்கும் மேலான, உடம்பில் உறைகின்ற இறைவனைக் காண்கிறான். அது பற்றி இரண்டு ஸ்லோகங்கள் உள்ளன.

மூன்று மாத்திரைகளைக் கொண்ட ஓம், உருவமற்றது. பரம்பொருளை யாரொருவன், ஓங்கார வடிவமாக, உருவமற்றதாகத்

த்யானிக்கிறானோ, அவன் ஆத்மா ப்ரகாசிக்கும். பிரகாசிக்கும் ஆத்மாவின் ஒளியினால் அவன் ஒளிர்பவனாகிறான். ஒளியால் சூரியனை அடைகிறான்.

ஆத்ம ஒளி ப்ரகாசிக்கத் தடையாக இருப்பவை நம் பதிவுகள். பாம்பு தன் சட்டையை கழற்றுவது போல் இவன் தன் பாவங்களிலிருந்து விடுபடுகிறான்.

பாவங்களிலிருந்து விடுபட்ட அவன், தன் புன்னிய பலனைப் பெறுவதற்காக, ஸாம வேத தேவதைகளால் ப்ரம்ம லோகத்தை அடைகிறான். அங்கு அவன் உயிர்த் தொகுதியான ஆத்மாவிற்கும் மேலான இறைவனை, உருவமற்று உடலில் உறைபவனாகக் கான்கிறான்.

பரம்பொருளை, ப்ரம்மத்தை, உருவமற்றதாகவே காண்பதால் தன் புன்னிய பலன்களைப் பெறும் இவன் நீண்ட காலம் கழிந்த பின், பதிவுகள் ஏதுமின்றி உலகில் பிறக்கிறான்.

மூன்றாவது மாத்திரையான 'ம்' எனும் ஒலி தூக்க நிலையைக் குறிக்கும். தூக்க நிலையில், உருவங்களைக் காண முடியாததாகையால், அவன் பரம்பொருளை உருவமற்றவனாகக் காண்கிறான்.

இந்த ஸ்லோகத்திலும் இதற்கு முந்தைய ஸ்லோகங்களிலும் 'ரிக் வேத தேவதைகள், யஜுர் வேத தேவதைகள், ஸாம வேத தேவதைகள்' என்று குறிப்பிடப்பட்டிருப்பது ஏன்?

ரிக் வேதம் என்பது துதி, பிரார்த்தனை போன்றவற்றைக் கொண்டது. யஜுர் வேதம் என்பது வேள்விகள் போன்ற கர்மங்களைக் கொண்டது. ஸாம வேதம் ஞான ரூபமானது. அதர்வண வேதம் உலகியலான வாழ்க்கை வேதம்.

விழிப்பு நிலையில் துதிகளும், கனவுநிலையில அகமுகமான வேள்விகளும், தூக்க நிலையில் ஞானமும் செயல்படுகின்றன (ஞான பரமான தூக்கத்திற்கு 'அறிதுயில்' அல்லது 'யோக நித்திரை' என்று

பெயர்). அவ்வாறு செயல்படும் வினைகளின் பதிவுகளே அந்த சாதகனைத் தாங்கிச் செல்கின்றன.

திஸ்ரோ மாத்ரா ம்ருத்யுமத்ய:
ப்ரயுக்தா அன்யோன்ய ஸக்தா அனவிப்ரயுக்தா
க்ரியாஸு பாஹ்யாப்யந்தரமத்யமாஸு
ஸம்யக்ப்ரயுக் தாஸு ந கம்பதே ஜ்ஞ

மூன்று மாத்திரைகளும் மரணத்திற்கு உட்பட்டவை. பிரிக்காமல், ஒன்றோடொன்று கலந்து, செயல்பாடுகளில் - வெளி, உள், நடுவில் - ப்ரயோகிக்கப்படும் போது, ஞானிகள் கலக்கமடைவதில்லை.

ஓங்காரத்தின் மூன்று மாத்திரைகளை தியானித்தாலும் பிறப்பு-இறப்புச் சுழலிலிருந்து தப்ப முடியாது. இவை யாவுமே மரணத்தை வெல்லும் வழியல்ல.
எனில், மரணத்தை வெல்வது எப்படி?

"ஒன்றோடொன்று இனைக்கப்பட்டால்" என்கிறது ஸ்லோகம். ஓங்காரம் மூன்று ஒலிகளால் ஆனது. அவற்றை ஒன்றாகக் கலக்கவேண்டும். அப்படித் தோன்றும் ஒலியே 'அநாஹத த்வனி' (விளக்கம் முன்பே பெட்டிச் செய்தியில் உள்ளது) இந்த ஒலி 'ம்' என்ற எழுத்தை உதடு பிரியாமல், வணடுகளின் ரீங்காரம் போல் ஒலிக்கும். இதனை ஒலி என்று குறிப்பிடுவது புரிதலுக்காகவே. இது ஒரு அதிர்வே ஆகும்.

பொதுவாக, எந்த ஒரு ஒலியையும் த்யானித்தால், அந்த ஒலி எந்த தளத்திலிருந்து எழுந்ததோ, அந்த தளத்திற்கு நம்மை இட்டுச்செல்லும். அதனால் தான், தேவாரமும், பிரபந்தங்களும் நம்மை பக்தியில் உருக்குகின்றன. வேதத்தின் அங்கமான கர்நாடக இசை நம்மை அமைதியில் ஆழ்த்துகிறது. காமக் களியாட்டங்களிலிருந்து எழும் ராக், பாப் இசைகள் வெறியூட்டுகின்றன.

படைப்பின் மூலத்திலிருந்து எழுந்த 'அநாஹத த்வனி' த்யானிக்கப்படும்போது நம்மை பிரம்மத்தின் நிலைக்கு இட்டுச் செல்லும். மேலும்

"பாஹ்ய அந்தர மத்யமாஸு ப்ரயுக்தாஸு" என்கிறது ஸ்லோகம். இந்த அநாஹத த்வனியானது 'வெளி, உள், நடு' நிலைகளில் பயன்படுத்தப்பட வேண்டும். வெளி, உள், நடு என்பவை முறையே விழிப்பு, தூக்கம், கனவு நிலைகளைக் குறிக்கும்.

விழிப்பும் தூக்கமும் எப்படி கலக்கும்? இவற்றில் கனவு நிலை எப்படி வரும்?. அந்த நிலை இந்த மூன்றிற்கும் அப்பாற்பட்டது. அதற்கு 'யோக நித்திரை' அல்லது 'அறிதுயில்' என்று பெயர். இந்த நிலையில் விழிப்புணர்வு இருக்கும், கனவு என்பது சாதாரண அகக்காட்சியாக இல்லாமல் தூலமாக இருக்கும். இந்த நிலை மிக ஆழ்ந்த தியான நிலையாகும்.

இத்தகைய நிலையில் அநாஹத த்வனியை த்யானிக்கும் 'ஞானி' சஞ்சலப்படுவதில்லை என்கிறது ஸ்லோகம். அதாவது, இவ்வாறு த்யானிக்கும் ஞானி 'சந்தேகப்படுவதில்லை' 'சூழ்நிலைகளால் பாதிக்கப்படுவதில்லை' என்கிறார் பிப்பலாத முனிவர்.

கேட்கப்பட்ட கேள்வி த்யானத்தின் பலனைப்பற்றியது. அதில் ஒப்பீடு உள்ளுறையாக இருந்ததைப் பார்த்தோம். இங்கே அதற்கு விடை இருக்கிறது. ஞானியின் – மரணத்தை வெல்பவனின் - எல்லா சந்தேகங்களும் சஞ்சலங்களும் மறைந்து போகின்றன.

ரிக்பிரேதம் யஜுர்பிரந்தரிக்ஷம்
 ஸாமபிர்யத் தத் கவயோ வேதயந்தே
தமோங்காரேணைவ ஆயதனேனான்வேதி வித்வான்
 யத்தச்சாந்தம் அஜரமம்ருதமபயம் பரம் சேதி.

ரிக் வேதப் பாதையால் இந்த உலகமும், யஜுர் வேதப்பாதையால் வெளியும், ஸாம வேதத்தால் எதுவோ அதுவும் யோகிகள் அறிந்திருக்கிறார்கள். ஓங்காரப் பாதையாலேயே அடையத்தக்க - அமைதியும், மூப்பற்றதும், அழிவற்றதும், பயமற்றதும், மேலானதுமான - அந்த நிலையை, அறிந்தவன் அடைகிறான்.

முந்தைய ஸ்லோகங்களில் ஓங்காரத்தின் ஒவ்வொரு மாத்திரையைத் தயானிப்பது பற்றி விளக்கப்பட்டது. அவ்வாறு உரைக்கப்பட்ட பலன்களை யோகிகள் அறிவர். ப்ரபஞ்சம் ஒடுங்கியிருந்த பிரம்ம நிலையானது (அங்கு வேறெதுவும்

இல்லாததால்) அமைதியானது, (காலம் கடந்த நிலையாததால்) மூப்பற்றது, (ஒடுக்க நிலையாதலால்) அழிவற்றது, (மற்றதொன்று இல்லாமையால்) பயமற்றது, மற்றும் மேலானது.

அத்தகைய இறைநிலை, முந்தைய ஸ்லோகம் குறிப்பிட்டபடியான ஓங்கார த்யானத்தாலேயே அடையத்தக்கது. இதனை உணர்ந்தவன் இந்த நிலையை அடைகிறான்.

இந்த உபநிஷதத்தில் 'பரம புருஷ வித்யை' என்ற பாதை, இந்த அத்தியாயத்தின் ஸ்லோகங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. 'நிர்குணப் ப்ரம்மம்' எனப்படும் பரப்ரம்மத்தை அநாஹதத் தவனியால் உணரும் பாதை இது.

<u>இவ்வாறாக, ப்ரச்ன உபநிஷதத்தின் ஐந்தாவது அத்தியாயம்.</u>

<u>ஆறாவது கேள்வி.</u>

அத: ஹைனம் ஸுகேசா பாரத்வாஜ: பப்ரச்ச பகவன் ஹிரண்யநாப: கௌஸல்யோ ராஜபுத்ரோ மாமுபேத்யைதம் ப்ரச்னமப்ருச்சத ஷோடசகலம் பாரத்வாஜ புருஷம் வேத்த? தமஹம் குமாரப்ருவம் நாஹமிமம் வேத யத்யஹமிமமவேதிஷம் கதம் தே நாவக்ஷ்;யமிதி. ஸமூலோ வா ஏஷ பரிசுஷ்யதி யோSன்ருதமபிவததி. தஸ்மாத் நார்ஹாமன்ருதம் வக்தும். ஸ தூஷ்ணீம் ரதமாருஹ்ய ப்ரவவ்ராஜ. தம் தாம் ப்ருச்சாமி க்வாஸௌ புருஷ இதி.

பிறகு, பரத்வாஜரின் மகனான ஸுகேசன் கேட்டான் "ஆசிர்வதிக்கப்பட்டவரே, கோசல நாட்டின் இளவரசனான ஹிரண்யநாபன் என்னை அனுகி 'பரத்வாஜரின் புதல்வனே, பதினாறு பகுதிகள் உடைய நபரைத் தெரியுமா?' என்று கேட்டார். அவரிடம் நான் சொன்னேன், "எனக்குத் தெரியாது. தெரிந்திருந்;தால் உங்களுக்கு எப்படி சொல்லாமல் இருப்பேன். யார் பொய்யை சொல்கிறானோ, அவன் நிச்சயமாக வேருடன் அழிந்து போகிறான். எனவே எனக்கு பொய் சொல்வதற்குத் துணிவு இல்லை". அவர் அமைதியாக ரதமேறி

சென்றுவிட்டார். அந்தக் கேள்வியை இப்பொழுது கேட்கிறேன். அந்த நபர் எங்கே?”

இந்தக் கேள்வி, ஆக்ஞா சக்கரம் எனும் ‘புருவ மத்தி சக்தி மைய’த்திலிருந்து வருகிறது. மேலோட்டமாக இந்தக் கேள்வியில் பணிவு தெரிந்தாலும், ஆழ்ந்து பார்த்தால் அகந்தைக் கிழங்கு இருப்பது தெரியும்.

சாதாரணமாகப் பார்த்தால், தனக்கு விடை தெரியாத ஒரு கேள்வியை இப்பொழுது கேட்பதாகத் தெரியும். ஆனால், இந்தக் கேள்வி வந்த மன நிலையைப் புரிந்து கொள்ளுங்கள்.

- நான் எல்லாம் தெரிந்தவன் - என்னை அனுகி பலர் சந்தேகம் தெளிகிறார்கள்.
- நான் பொய் சொல்லாதவன். தர்ம சாஸ்திரங்கள் அறிந்தவன்
- இந்தக் கேள்வியோ சந்தேகமோ என்னுடையதல்ல.

இந்த எல்லா எண்ணங்களும் உள்ளுறையாக இந்தக் கேள்வியில் உள்ளது.

“ஒரு இளவரசன் கேட்டான்” என்பது தேவையில்லாத செய்தி. அந்த இளவரசனுக்கு அளித்த பதிலிலும் பொய் பேசுவதைப் பற்றிச் சொன்னது தேவையில்லாதது.

இந்தக் கேள்வி இவருடையதல்லவென்றால், பதிலில் இவருக்கு என்ன அக்கறை இருக்க முடியும்?

ஆக்ஞா சக்கரத்தின் தடைக்கல் இதுதான். ‘தான் சரியானவன் (அ) எல்லாம் அறிந்தவன்’ என்ற செருக்கு. இதற்கு விடையென்ன? எளிமையே இதற்கு மாற்று. எளிமைக்கு விளக்கம் கிடையாது. எளிமையை எது சொல்லி விளக்கினாலும் அந்த சொற்களை எல்லாம் அகந்தை எடுத்துக் கொள்ளும். ‘தாஸன்’ என்பார்கள், ‘அடியேன்’ என்பார்கள், அடி ஆழத்தில் அகந்தைக் கிழங்கு காத்திருக்கும். எளிமையான, வெளிப்படையான அந்த பதிலைப் பார்போம்.

தஸ்மை ஸ ஹோவாச. இஹைவாந்த: சரீரே ஸோம்ய ஸ
புருஷோ யஸ்மின்னேதா ஷோடசகலா: ப்ரபவந்தீதி.

அவனிடன் பிப்பலாத முனிவர் கூறினார், "இனியவனே, யாரிடமிருந்து பதினாறு கலைகள் தோன்றினவோ, அவர் இந்த உடலினுள்ளே இருக்கிறார்"

ஸ: ஈக்ஷாம்சக்ரே கஸ்மின் அஹமுத்க்ராந்த உத்க்ராந்தோ பவிஷ்யாமி  கஸ்மின் வா ப்ரதிஷ்ட்டிதே ப்ரதிஷ்ட்டாஸ்யாமீதி

அவர், "யார் வெளியேறினால் நான் வெளியேறியவனாவேன்? யார் நிலைபெற்றால், நான் நிலைபெற்றவனாவேன்" என்று சிந்தித்தார்.

முந்தைய ஸ்லோகத்தில் சொல்லப்பட்ட அந்த நபர், தன் வெளிப்பாட்டைப் பற்றி சிந்தித்தார். அதாவது, தான் நிலைபெற்றிருப்பதும், வெளியேறுவதும் யாரைச் சார்ந்தது என்று சிந்தித்தார்.

ஸ: ப்ராணமஸ்ருஜத ப்ராணாத்ச்ரத்தாம்கம் வாயுர்ஜ்யோதிராப ப்ருத்வீந்த்ரியம் மன: அன்னமன்னாத்வீர்யம் தபோ மந்த்ரா: கர்மலோக: லோகேஷு{ச நாம ச

அவர் ப்ராணனைப் படைததார். பிராணனிலிருந்து புத்தி, வெளி, காற்று, ஒளி, நீர், நிலம், மனம், உணவு, உணவிலிருந்து ஆற்றல், தவம், மந்திரங்கள், உலகம், உலகத்திலுள்ளவை மற்றும் அவற்றின் பெயர்கள் உருவாயின.

உருவாகிய பதினாறும் அவரின் பதினாறு பகுதிகள். இந்த பதினாறு பகுதிகளை உடைய நபர் 'ஆத்மா'

ஸ யதேமா நத்ய: ஸ்யந்தமானா: ஸமுத்ராயணா: ஸமுத்ரம் ப்ராப்யாஸ்தம் கச்சந்தி பித்யதே தாஸாம் நாமரூபே ஸமுத்ர இதயேவம் ப்ரோச்யதே ஏவமேவாஸ்ய பரித்ரஷ்டரிமா ஷோடசகலா: புருஷாயணா: புருஷம் ப்ராப்யாஸ்தம் கச்சந்தி பித்யதே தாஸாம் நாமரூபே புருஷ இத்யேவம் ப்ரோச்யதே ஸ ஏஷோ Sகலோ Sம்ருதோ பவதி ததேஷ ஸ்லோக:

நதிகள் கடலை நோக்கி ஓடுகின்றன. கடலில் கலக்கின்றன. கலந்த பின் அவற்றின் பெயர்களும் தனித்தன்மையும் அழிந்து 'கடல்' என்றே அழைக்கப்படுகின்றன. அதுபோலவே எல்லாவற்றையும் காண்பவையான இந்த பதினாறு பகுதிகளும் ஆத்மாவை நாடி, ஆத்மாவில் கலந்து விடுகின்றன. அதன் பிறகு தமது பெயர் மற்றும் தனித்தன்மைகளை இழந்து 'ஆத்மா' என்றே அழைக்கப்படுகின்றன. ஆத்மா, பகுதிகளற்றதாக, அழிவற்றதாக இருக்கிறது.

நதிகள் உருவாக மழையே காரனம். மழைக்கு ஆதாரம் ஆவியாகும் கடல் நீர். எனவே, கடலே நதியை உருவாக்குகிறது. நதிகள் சேர்ந்து கடலை உருவாக்குகின்றன. நதிகள் தன்னிடமிருந்து உருவாவதாலும், தன்னில் கலப்பதாலும் கடல் மாற்றமடைவதில்லை. அது போலவே பதினாறு பகுதிகளையும் ஆத்மா தானே உருவாக்கியது. அவை யாவும் ஆத்மாவிலேயே கலந்து மறைகின்றன. ஆத்மா, இந்த பகுதிகளின் உருவாக்கத்தாலோ, தன்னில் கலப்பதாலோ எந்த பாதிப்பையும் அடைவதில்லை.

அரா இவ ரதநாபௌ கலா யஸ்மின் ப்ரதிஷ்ட்டிதா:
தம் வேத்யம் புருஷம் வேத யதா மா வோ ம்ருத்யு: பரிவ்யதா இதி.

தேர்ச்சக்கரத்தின் அச்சில் ஆரக்கால்கள் இனைவது போல் இந்தப் பகுதிகள் யாவும் எங்கு நிலைபெறுகின்றனவோ அதனை அறியவேண்டும். எதனால் மரணம் தீண்டாதோ, அந்த ஆத்மாவை அறியுங்கள்.

ஆத்ம அனுபூதி மட்டுமே மரணமற்றப் பெருவாழ்வை அளிக்கும். இங்கு 'அறிதல்' என்பது வெறும் நூலறிவோ, கேள்வியோ அல்ல. ஆத்மாவே தான் என்பதை முற்றிலுமாக உணர்தல்.

தான் ஹோவாச ஏதாவதேவாஹமேதத் பரம் ப்ரஹ்ம வேத.
நாத பரமஸ்தீதி.

**அவர்களிடம் (பிப்பலாத முனிவர்) கூறினார், "மேலான ஆத்மாவைப் பற்றி எனக்குத் தெரிந்தது இவ்வளவே. இதற்கு மேல் இல்லை"**

**கேள்வியில் அகந்தை தலைகாட்டியதால், அதற்கு எதிரான எளிமையை, அடக்கத்தை இங்கு காட்டுகிறார் முனிவர்.**

**தே தமர்ச்சயந்தஸ்த்வம் ஹி ந: பிதா யோSஸ்மாகமவித்யாயா:**
**பரம் பாரம் தாரயஸீதி. நம: பரமரிஷிப்யோ நம பரமரிஷிப்ய:**

**அவர்கள் (சீடர்கள்) முனிவரை வழிபட்டு, நீங்களே எங்கள் தந்தை. எங்களை அறியாமைக் கடலிலிருந்து மேலான கரைக்கு அழைத்துச்சென்றீர். மேலான ரிஷிகளுக்கு நமஸ்காரம். மேலான ரிஷிகளுக்கு நமஸ்காரம்.**

**தத்தமது சந்தேகங்கள் நீங்கப் பெற்ற சீடர்கள், அவரைப் புகழ்ந்து, தம் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறார்கள்.**

**<u>இவ்வாறு ப்ரச்ன உபநிஷதம்</u> முடிவடைகிறது.**

**ஓம் பத்ரம் கர்ணேபி ஸ்ருணயாம தேவா:**
**பத்ரம் பச்யேமாக்ஷ பிர் யஜத்ரா|**
**ஸ்திராரங்கைஸ் துஷ்ட்டுவாக்ம்ஸஸ்தனூபி:**
**வ்யசேம தேவஹிதம் யதாயு --(1)**
**ஸ்வஸ்தி ந: இந்த்ரோ வ்ருத்த ச்ரவா:**
**ஸ்வஸ்தி ந பூஷா விச்வ வேதா**
**ஸ்வஸ்தி நஸ்தார்க்ஷ யோ அரிஷ்ட்டநேமி:**
**ஸ்வஸ்தி நோ பிருகஸ்பதிர் ததாது --(2)**
**ஓம் சாந்தி சாந்தி சாந்தி.**

**இந்த நூலாசிரியரின் மற்ற நூல்கள்**

**தமிழில்**

**கேன உபநிஷதம்**

**மாண்டுக்ய உபநிடதம்**

**முண்டக உபநிஷதம்**

**தைத்திரீய உபநிடதம்**

**ஈசா உபநிடதம்**

**கடோபநிஷதம்**

**விஞ்ஞான பைரவம்**

English commentary by this author

Kena Upanishad

Taithriya Upanishad

Mandukya Upanishad

Isa Upanishad

Mundaka Upanishad

Other works:

**Any time meditation**
**Finger tip wonders**
**and many more. Please**
**visit website for more details.**